வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 04.11.2024 திங்கட்கிழமை | இதழ் : 308 | பக்கங்கள் : 12

# இரண்டு அமைச்சு பதவிகளில் சுமந்திரன் கண் வைத்துள்ளார்!

## நேரடியாக சாடுகிறார் சிறீகாந்தா



யாழ்ப்பாணம், நவம்பர் 04

தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைப்பதில் ஆசனப் பற்றாக்குறை ஏற்படுமிடத்து தமிழ் அரசுக் கட்சி ஆதரவு கொடுக்க வாய்ப்புள்ளது. சுமந்திரனுக்கு அமைச்சு பதவி அவசரமாக - அவசியமாக தேவைப்படுகிறது. வெளிவிவகார அமைச்சு இல்லையேல் நிதி அமைச்சில் அவர் கண் வைத்திருக்கிறார் - என்று தமிழ்த் தேசியக் கட்சியின் என். சிறீகாந்தா குற்றஞ்சாட்டியுள்ளார்.

11



## சனநாயக தமிழரசின் விஞ்ஞாபனம் வெளியீடு

- சி. சிலக்சன் -

யாழ்ப்பாணம், நவ. 04

சனநாயக தமிழரசு கூட்டமைப்பின் (சுயேச்சை குழு - 14) தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் தனியார் விருந்தினர் விடுதியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

11

## அநுரவுடன் தொலைபேசியில் உரையாடிய சஜித் பிரேமதாஸ

கொழும்பு, நவ. 04

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியுள்ளார் என்று தெரிய வருகின்றது.

அறுகம்குடா தாக்குதல் தொடர்பான எச்சரிக்கை விடுக்கப்பட்ட நேரத்தில் இந்த அழைப்பு

11

## அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படும்!

### ஜனாதிபதி அநுர குமார

நுவரெலியா, நவ. 04

தேசிய மக்கள் சக்தியின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் அடுத்த ஆண்டு சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதில், அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற பரப்புரை கூட்டத்தில் உரையாற்றியபோதே

11

## தமிழ் தேசியத்தை விற்காதோரை பாராளுமன்றத்துக்கு அனுப்புங்கள்!

### சனநாயக தமிழரசு கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், நவ. 04

தமிழ் தேசியத்தை விலைபேசி விற்பதற்கு பல்வேறு தரப்புக்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களிடம் தமிழ் மக்கள் விழக்கூடாது. தமிழ் தேசியத்தை உண்மையாக நேசிப்பவர்கள் - அதற்காக போராடுபவர்களை மக்கள் பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் - இவ்வாறு கூறியுள்ளார் சனநாயக தமிழரசு கட்சியின் ஈ. சரவணபவன்.

சனநாயக தமிழரசு கூட்டமைப்பின் தேர்தல்

11

## விபத்துகளில் 1,898 பேர் பலி!

கொழும்பு, நவ. 04

இந்த ஆண்டில் ஒக்ரோபர் 25ஆம் திகதி வரை ஆயிரத்து 818 வீதி விபத்துகள் இடம்பெற்றன. இவற்றில் ஆயிரத்து 898 பேர் உயிரிழந்தனர் என்று பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ

11

## வன்முறையற்ற தேர்தல் கலாசாரம் உருவாகிறது!

### கபே அமைப்பு தெரிவிப்பு

வவுனியா, நவ. 04

ஜனநாயகத்தை மதிக்கின்ற - வன்முறைகளற்ற தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணையும் கலாசாரம் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் (கபே) நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்துள்ளார்.

கபே அமைப்பின் அமைதியான தேர்தலுக்காக ஒன்றுபடுவோம் எனும் தொனிப் பொருளில் வவுனியாவில் நேற்று தேர்தல் விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.

இதன் பின்னர் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் இருந்த தேர்தல் நிலவரமும் தற்போது இருக்கின்ற நிலவரத்தையும் பார்க்கும் போது ஜனநாயகத்தை மதிக்கின்ற வன்முறைகளற்ற ஒரு சமாதானமான

11













உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது

டான் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிவரும் தேர்தல் கால சிறப்பு நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தேன். இந்தத் தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகள் மூன்றின் இளம் வேட்பாளர்கள் கலந்துகொண்டு விவாதித்துக் கொண்டிருந்தனர்.

இரண்டு மணிநேர நிகழ்ச்சியில் சுமார் ஒன்றரை மணிநேரம் அவர்கள் விவாதித்துக் கொண்டிருந்தது இந்த சங்கு சின்னத்தை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி பயன்படுத்துவது பற்றித்தான். சின்னத்துக்கு எதற்காக இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பது புரியவில்லை.

எழுபத்தியேழு தேர்தலில் தமிழர்களின் தேசிய சின்னமாக இருந்த உதய சூரியன் சின்னத்தில் வாழை மரத்தை வேட்பாளராக நிறுத்தினாலும் அவர் வெற்றிபெறுவார் என்று சிலேடையாக கூறப்படுவதுண்டு. ஆனால், அந்தச் சின்னம் எண்பத்தியேழில் படு தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது.

இப்படி சின்னம் என்பதுதான் அவர்களுக்கு பிரச்னையாக இருக்கிறது என்றால், அதன் அர்த்தம் அவர்களிடம் பேசுவதற்கு வேறு ஒன்றும் இல்லை என்பதுதான்.

சங்கு சின்னம் பற்றி அவர்கள் விவாதித்துக் கொண்டிருந்தபோதுதான் இதுபற்றி சில விடயங்களை எழுத வேண்டும்போல இருந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்துவது என்ற யோசனை முன்வைக்கப்பட்ட பின்னர், சில சிவில் அமைப்புகள் வவுனியாவில் ஒன்றுகூடி தமிழ் பொதுச்சபை என்ற சிவில் சமூக அமைப்புகளின் கூட்டு ஒன்றை அமைத்ததும், அதன் பின்னர் அந்த பொதுச்சபை அரசில் கட்சிகளுடன் தமது யோசனைக்கு ஆதரவு கேட்டு பேசியதும் நமக்குத் தெரிந்தவைதான். கடைசியில் ஐந்து கட்சிக் கூட்டமைப்பான ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கமுமாக ஏழு அரசியல் கட்சிகளும் சேர்ந்து பின்னர் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பை உருவாக்கின. அவை எல்லாம் பழைய சங்கதிகள்தான் என்றாலும், அந்தப் பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் போதுகூட வேட்பாளர் பற்றியோ எந்தக் கட்சியில் போட்டியிடுவது என்பது பற்றியோ யோசிக்கவில்லை என்பது அனைவருக்கும் தெரிவித்தவைதான். பொதுக்கட்டமைப்பு உருவாக்கி கட்சிகளும் சிவில் அமைப்புகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட போது இரண்டு விடயங்கள் பேசப்பட்டன. வேட்பாளர், எதிர்காலத்தில் இல்லாவிட்டாலும் உடனடியாக நடக்கின்ற தேர்தலில் போட்டியிடக் கூடாது. அதேபோல, அந்தத் தேர்தலில் ஒரு கட்சியின் சின்னத்தை பயன்படுத்தினால், அந்தச் சின்னத்தை அடுத்த தேர்தலில் பயன்படுத்தக்கூடாது. இவை இரண்டும் இரு தரப்பினரிடையேயும் பேசப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் உள்வாங்கப்பட்டவைதான்.

இதன் பின்னரே வேட்பாளர் தேடும் படலம் தொடங்கியது. எதிர்பார்க்கப்பட்டதுபோல ஒரு வேட்பாளரை தேடினால், அவர் எந்தக் கட்சியில் போட்டியிடுவது என்பது அடுத்த கேள்விக்குரியதாகியது. தனது கட்சியில் போட்டியிட முடியாது என்று விக்னேஸ்வரன் ஆரம்பத்திலேயே கூறிவிட்டார் - காரணம் புரிந்துகொள்ள சுலபமானது, அவர் தனது கட்சி அடுத்து நடக்கும் எந்தத் தேர்தலிலும் போட்டியிட வேண்டும். அடுத்து இருப்பவை ஐந்து கட்சிக் கூட்டணியில் இருந்த ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ். கட்சிகள். பொருத்தமான வேட்பாளரை கண்டுபிடிப்பது மாத்திரமல்ல - இந்த கட்சிகளின் சின்னத்தில் போட்டியிடுவதற்கு தயாரானவராகவும் அவர் இருக்கவேண்டும் என்ற நிலைமை பொதுக்கட்டமைப்புக்கு.

அதிகம் ஏன், ஒரு பொருத்தமான பெண் வேட்பாளர் ஆரம்பத்தில் போட்டியிட இணக்கம் தெரிவித்தார். ஆனால், பின்னர் அவர் தயங்கியது, அந்த மூன்று கட்சிகளில் ஒன்றில் போட்டியிட வேண்டும் என்பதால்தான். ஆனால், அவரே இப்போது அந்த மூன்று கட்சிகளில் ஒன்றின் வேட்பாளராக பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது வேறு சங்கதி.

வேட்பாளர் தேர்வு, கட்சித் தேர்வு என்று இழுபறிப்பட்ட வேளையில் அந்தக் கட்சிகளும் பின்னடிக்க ஆரம்பித்தன. தமது கட்சியின் சின்னத்தில் போட்டியிடுகின்றவர் அதிக வாக்குகளை எடுக்காமல் போனால் தமது கட்சியால்தான் வாக்குக் கிடைக்கவில்லை என்று யாராவது கூறக் கூடும் என்று கட்சிகள் தயக்கம் காட்ட, கடைசியில் சுயேச்சையாக போட்டியிட முடிவானது. அப்போதுதான் அந்த அமைப்பில் இருந்த சிலருக்கே ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சையாக போட்டியிடுவதெனில் முன்னாள் எம். பி. ஒருவர்தான் போட்டியிடலாம் என்பதே தெரியவந்தது.

அதனால், இந்நாள் - முன்னாள் எம். பிக்களில் ஒருவரை தேடிப்பிடிக்கவேண்டி வந்ததும் புரிந்துகொள்ளக்கூடியவைதான்.

இப்போது சுயேச்சையாகப் போட்டியிடுவது என்று வந்துவிட்டாலே, அந்தச் சின்னம் தேர்தல் ஆணையத்தின் சின்னம். அந்தச் சின்னத்தை அடுத்த தேர்தலில் பாவிப்பதில்லை என்ற பொதுக்கட்டமைப்பின் நிபந்தனை பொருத்தமற்றதாகி விட்டது. ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடும் ஒருவருக்கு ஒதுக்கப்படும் சின்னம், தேர்தல் முடிந்ததும் தேர்தல் திணைக்களத்தின் சொத்தாகி விடுகின்றது.

இப்போது அதனை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி கையகப்படுத்தியதை குறை சொல்பவர்கள், அவர்கள் அதனை கையகப்படுத்தாவிட்டால் அது இன்று யாரோ ஒரு சுயேச்சையின் சின்னமாகியிருக்குமே என்பதை கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

அவ்வாறு எவராவது ஒருவர் தனக்காக அந்தச் சின்னத்தை பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிலை வருகின்றபோது, அதற்கு உரிமை கொண்டாடக்கூடிய ஒரே தகுதி அந்த ஐந்து கட்சிக் கூட்டணிக்குத்தான் உண்டு என்பதையும் நாம் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்ற யோசனை முன்வைக்கப்பட்ட நாட்களிலிருந்து (அதனை நிறுவன ரீதியாக முதலில் முன்வைத்தவர்கள் அவர்கள் தான்) அதற்கு ஆதரவாக பேசிய தமிழர் தரப்பிலும் பார்க்க, எதிராக பேசியவர்களும்- கேலி செய்தவர்களும்தான் அதிகம்.

அதைவிட முக்கியமானது, ஒரு கட்டத்தில் அந்த யோசனையை கைவிடுங்கள் என்று பலம்பொருந்திய நாடு ஒன்று அழுத்தம் கொடுத்தபோதுகூட, அதனை இனி நாங்கள் கைவிடமுடியாது என்று பிடிவாதமாக மறுத்ததோடு, அவர்களின் கோபத்துக்கும் ஆளாகியவர்கள் அதனை ஆதரித்த அரசியல் கட்சிகள்.

தேர்தல் திணைக்களத்தின் சின்னமான பின்னர் வேறு எவராவது அதனைப் பெறுவதைத் தடுத்து, தமது சின்னமாக அதனை மாற்றுகின்ற உரிமையும் தகுதியும் அந்த ஐந்து கட்சிகளின் கூட்டணிக்குத்தான் உண்டு.

சங்கை துவம்சம் செய்வோம், அதனை உடைத்து எறிவோம் என்று சஜித் பிரேமதாஸவின் தேர்தல் மேடைகளில் நின்றும் கர்ஜித்தவர்கள் அந்தச் சின்னத்தைப் பற்றி பேசுவதற்கே அருகதையற்றவர்கள்.!

- ஊர்க்குருவி.

பயணிகளிடம் அதிக வரவேற்பு பெறும்

## நாகை - காங்கேசன் கப்பல் சேவை வாரத்தில் 5 நாட்கள் நடைபெறும்

நாகப்பட்டினம், நவ. 04

இரு நாட்டு பயணிகளிடம் அதிக வரவேற்பு இருப்பதால், நாகையில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு வாரத்தில் 5 நாட்களுக்கு பயணிகள் கப்பல் இயக்கப்படும் என்று கப்பல் போக்குவரத்து நிர்வாகம் அறிவித்துள்ளது. இதன்படி, எதிர்வரும் 8ஆம் திகதி முதல் வெள்ளிக்கிழமைகளிலும் கப்பல் சேவை இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாகை - இலங்கை இடையே 'சிவகங்கை' என்ற பயணிகள் கப்பல் சேவை கடந்த ஒகஸ்ட் 16ஆம் திகதி தொடங்கியது. அப்போது, இரு மார்க்கத்திலும் தினமும் கப்பல் இயக்கப்பட்டது.

இந்த நிலையில், பயணிகள் முன்பதிவு குறைவாக இருந்ததால், செவ்வாய், வியாழன், ஞாயிறு என வாரத்தில் 3 நாட்களாக கப்பல் சேவை குறைக்கப்பட்டது. பின்னர், சனிக்கிழமை உட்பட 4 நாட்களுக்கு கப்பல் சேவை நடைபெற்றது. (எ)

## அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு விடுமுறை

தேர்தல்கள் ஆணைக்குழு முக்கிய அறிவிப்பு

கொழும்பு, நவ. 04

இம்மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிக்கவுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் தேர்தல் கால விடுமுறைகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் முக்கிய அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் தாம் பணிபுரியும் நிறுவனத்திலிருந்து வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லும் தூரத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த விடுமுறைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து 40 கிலோ மீற்றர் அல்லது அதற்கு குறைந்த தூரத்தில் இருப்பவர்களுக்கு அரைநாள் விடுமுறையும், 40 கிலோ மீற்றரிலிருந்து 100 கிலோ மீற்றருக்கு இடையிலான தூரத்தில் இருப்பவர்களுக்கு ஒரு நாள் விடுமுறையும், 100 கிலோ மீற்றரிலிருந்து 150 கிலோ மீற்றருக்கு இடையிலான தூரத்தில் இருப்பவர்களுக்கு ஒன்றரை நாள் விடுமுறையும், 150 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்தில் இருப்பவர்களுக்கு இரு நாட்கள் விடுமுறையும் வழங்கப்படும்.

இதன்போது, அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் சம்பளம் மற்றும் தனிப்பட்ட விடுமுறை விதிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ)

## வெளிநாட்டு பணம் அனுப்பல் செப்ரெம்பர் மாதத்தில் வீழ்ச்சி

கொழும்பு, நவ. 04

ஒகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடும்போது, செப்ரெம்பர் மாதத்தில் வெளிநாட்டுப் பணியாளர்களால் அனுப்பப்பட்ட பணத்தொகை குறைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

ஒகஸ்ட் மாதத்தில் பதிவாகிய 577 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில், செப்ரெம்பர் மாதத்தில் பெறப்பட்ட பணம் 556 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைந்துள்ளதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இருப்பினும், 2023 செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், இவ்வருடம் செப்ரெம்பரில் வெளிநாட்டுப் பணியாளர்கள் பணம் அனுப்புவதில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வருடம் மார்ச் முதல் செப்ரெம்பர் வரை தொடர்ச்சியாக வெளிநாட்டுப் பணியாளர்கள் அனுப்பிய மாதாந்த தொகை 500 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியுள்ளதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, கடந்த மாதம் செப்ரெம்பர் மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருமானம் 181 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இதன்படி, இவ்வருடம் ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் சுற்றுலாத்துறை மூலம் கிடைத்த வருமானம் 2,348 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என்று மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (எ)

## லொஹானுக்கு சிறைச்சாலை மருத்துவமனையில் சிகிச்சை

கொழும்பு, நவ. 04

விளக்கமறியலில் வைக்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சிறைச்சாலை மருத்துவரின் பரிந்துரைப்படி சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலை விவகாரங்களுக்கான அமைச்சு அறிவித்துள்ளுது.

அத்துடன், லொஹான் ரத்வத்த முன்னாள் சிறைச்சாலைகள் அமைச்சராகப் பதவி வகித்தமையால் அவருக்கு விசேட பாதுகாப்பு மற்றும் மருத்துவ சிகிச்சைகளை வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் சுவாசக்கோளாறு காரணமாக சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தநிலையில், சிகிச்சையின் பின்னர், அவர் மீண்டும் சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவார்.

மிரிஹான பகுதியில் உள்ள அவரது மனைவியின் இல்லத்திலிருந்து இலக்கத் தகடு இல்லாத மகிழுந்து ஒன்று மீட்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை கைது செய்யப்பட்டார் என்பது தெரிந்ததே. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 04.11.2024 திங்கட்கிழமை ඊළනාඩු
பிலவ வருடம், ஐப்பசி 18

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலும் பதுளையில் 'அடிபட்ட' பஸ்ஸூம்

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் தெற்கு வளாகத்தின் (சூரிய வெவ) மாணவர்கள் கள ஆய்வுச் சுற்றுலாவுக்கு சென்றபோது, அவர்கள் பயணம் செய்த பஸ் இயந்திர கோளாறு காரணமாக பதுளை அம்பகஹ ஓயாவில் கடந்த வெள்ளிக்கிழமை காலை விபத்துக்கு உள்ளானதில் இரு மாணவிகள் மரண மடைந்தனர். அத்துடன், 35இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தார்கள்.

மறுநாள் சனிக்கிழமை புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இலங்கைக்கும் அந்த பஸ்ஸின் கதியே ஏற்படும் என்று கூறினார்.

விபத்துக்கு உள்ளான அந்த பஸ் அணையொன்றுடன் மோதியதில் மீண்டும் பயன்படுத்தவே முடியாத அளவுக்கு படுமோசமாக சேதமடைந்திருக்கிறது. விபத்து தொடர்பாக ஊடகங்களில் வெளியான படங்களை பார்த்தவர்களுக்கு அந்த சேதத்தின் பாரதூரத்தன்மை விளங்கும். அந்த அளவு படுமோசமாக இலங்கை தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் சேதமடையப் போகிறது என்று முன்னாள் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கிறார். விபத்தில் பலியான இரு மாணவிகளின் குடும்பங்களுக்கு அவர் அனுதாபத்தை தெரிவித்ததாகவோ அல்லது காயமடைந்தவர்களைச் சென்று பார்த்து நலன் விசாரித்ததாகவோ செய்தி எதுவும் வந்ததாக இல்லை.

புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரசாரங்களில் விக்கிரமசிங்க ஈடுபட்டிருக்கிறார். பிரதானமாக ராஜபக்ஷக்களின் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்தும் வேறு அரசியல் கட்சிகளில் இருந்தும் வெளியேறி வந்து ஜனாதிபதித் தேர்தலில் தன்னை ஆதரித்தவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அவசரமாக அமைத்த புதிய ஜனநாயக முன்னணியின் பிரசாரக் கூட்டங்களில் நட்சத்திர பேச்சாளரே விக்கிரமசிங்கதான். தேர்தலில் அவர் போட்டியிடவில்லை. ஆனாலும், தங்களது அரசியல் எதிர்காலத்தை பணயம் வைத்து அவர்கள் தன்னை ஆதரித்தமைக்காக இப்போது அவர் பிரசாரங்களில் தன்னை தீவிரமாக ஈடுபடுத்தி நன்றி கடனைச் செலுத்திக் கொண்டிருக்கிறார் போலும்.

தேசிய மக்கள் சக்தியால் நாட்டை ஒழுங்காக நிருவகிக்க முடியாது என்ற கருத்தையே முன்னாள் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில் பிரதானமாக வலியுறுத்திக் கூறிவருகிறார். ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்து பதவியில் இருந்து இறங்கி வீடு சென்றபோது புதிய ஜனாதிபதிக்கு விக்கிரமசிங்க அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் "ஆபத்து நிறைந்த கயிற்று பாலத்தின் ஊடாக நான் நீண்ட தூரம் பாதுகாப்பாக தூக்கிவந்த குழந்தையை உங்களிடம் கையளிக்கிறேன். என்னை விடவும் கூடுதல் பாதுகாப்புடன் அந்த குழந்தையை தூக்கிச் சென்று கயிற்று பாலத்தின் எஞ்சிய தூரத்தைக் கடந்து அடுத்த கரையை அடைவீர்கள் என்று நம்புகிறேன்" குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், வெகுசீக்கிரமே அந்த நம்பிக்கையை விக்கிரமசிங்க இழந்து விட்டார் போன்று தெரிகிறது. தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களுக்கு அனுபவம் கிடையாது என்பதால் தன்னுடன் கடந்த இரு வருடங்களாக பணியாற்றியவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைக்குமாறு அவர் இடையறாது கேட்டுவருகிறார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலில் பொருளாதாரத்தை மீட்டெடுக்க தன்னால் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளையே புதிய ஜனாதிபதியும் தொடர்ந்து முன்னெடுக்கிறார் என்பதால் அவருக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கு விக்கிரமசிங்க மனங்கொள்ளவில்லை. மாறாக, இந்த அரசாங்கம் எவ்வளவு காலம் நின்று பிடிக்குமோ என்று தெரியவில்லை என்று 'பல்லி' சொல்லிக் கொண்டிருக்கிறார்.

இரு வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட நாள் முதல் விக்கிரமசிங்க நாட்டை மீட்டெடுக்க தனக்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று இடையறாது விடுத்த அழைப்பே இந்த சந்தர்ப்பத்தில் நினைவுக்கு வருகிறது.

நீண்டகால அரசியல் அனுபவமும் பல்துறைகளிலும் ஆழமான அறிவும் கொண்ட விக்கிரமசிங்க தனது பொருளாதார கொள்கையையே தொடர்ந்து முன்னெடுக்கும் புதிய அரசாங்கம் நாட்டை சரியாக நிருவகிக்க மாட்டாது என்று கூறுவது தர்க்க நியாயத்துக்கு பொருந்தவில்லை. ஜனாதிபதி திசாநாயக்கவையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தையும் நியாயப்படுத்துவதாக இங்கு முன்வைக்கப்படும் கருத்துகளை எவரும் அர்த்தப்படுத்த வேண்டியதில்லை.

ஆனால், மக்களின் தீர்ப்பை மதிக்கிறோம் என்று தேர்தல் முடிவுகள் வெளியான மறுகணமே தவறாமல் சொல்வதை பாரம்பரியமாக, பழக்கதோசமாகக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் மாற்றத்தை விரும்பிய மக்களின் விருப்பங்களை மதித்து புதிய அரசாங்கத்துக்கு ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்காவது அவகாசம் கொடுப்பதே முறையான செயலாகும். அதைவிடுத்து திருத்தி எடுக்கமுடியாத அளவுக்கு சேதம் அடைந்த பஸ்ஸுக்கு நேர்ந்த கதியையே இலங்கை சந்திக்கும் என்று கூறுவது அரசியல் தலைவருக்கு பொருத்தமானது அல்ல.

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2024

"தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்காரமுடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப்பாரியளவில் வளர்ச்சியடையும்."

- கிரேக்கப் பழமொழி



# பரீட்சைகளுக்குப் பாதிப்பு ஏற்படலாம் இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 04

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் தாமதமாவதால் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்குப் பாதிப்பு ஏற்படலாம் என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, கல்வித்துறை அதிகாரிகள் இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் தாமதமாவதால் மாணவர்களின் பாடசாலைக் கல்வியிலும் பாதிப்பு ஏற்படும் - என்றார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜெயசுந்தர கூறுகையில்,

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் கசிந்த சம்பவம் தொடர்பில் உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளை ஆரம்பிக்க முடியவில்லை.

எவ்வாறிருப்பினும், இது தொடர்பில் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# மூன்று மாகாணங்களில் பலத்த மழை

கொழும்பு, நவ. 04

மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.


நாட்டின் பல பகுதிகளில் மாலை வேளையில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக் கூடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையால் ஏற்படும் மின்னலினால் ஏற்படும் விபத்துகளை குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது. (எ)

# கந்தசஷ்டி விரத திருவிழா நல்லூரிலும் ஆரம்பமானது!

(படம் : ஐ.சிவசாந்தன்)



யாழ்ப்பாணம், நவ. 04

கந்த சஷ்டி விரதம் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமானது. இதையொட்டி, நல்லூர் கந்த சுவாமி ஆலயத்திலும் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன.


கந்தசஷ்டி விரத நாட்களில் தினமும் காலை 09 மணிக்கு சிவலிங்க பூசையும் 10 மணிக்கு காலசந்தி பூசையும் 10.15 மணிக்கு வசந்த மண்டப பூசையும் நடைபெறவுள்ளது.

சாயரட்சை பூஜை மாலை 3.45 மணிக்கும் , 2ஆம் கால சந்தி பூஜை 4 மணிக்கும் தொடர்ந்து 4.15 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் இடம்பெற்று முருகப்பெருமான் வெளிவீதியுலா வலம் வந்து பக்தர்களுக்கு அருள் காட்சி அளிப்பார்.

எதிர்வரும் 07ஆம் திகதி வியாழக்கிழமை மாலை சூரசம்ஹார உற்சவமும் மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளன.

இதேவேளை சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் கந்த சஷ்டி விரத நாட்களில் முருகப்பெருமான் மாலையில் வெளிவீதி வலம் வரும்போது பஜனை நடைபெற்று வருகிறது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
அடுக்கடுக்கான வேலைகளால் அவதிக்கு உள்ளாவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களுடன் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி இருக்கும்.

**இடபம்**
கடினமான வேலைகளையும் மாறுபட்ட அணுகுமுறையால் முடித்துக் காட்டுவீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக அமையும். தாயாரின் உடல் நிலை சீராகும்.

**மிதுனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வழக்கு சாதகமாகும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.

**கடகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

**சிம்மம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். பணப்பற்றாக்குறை நீடித்தாலும் கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**கன்னி**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சனைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். அரசால் ஆதாயம் ஏற்படும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். தோற்றப் பொலிவு கூடும். பணம் கைக்கு வரும். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மனதில் இனம் புரியாத பயம் வந்துப் போகும். வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். எதிர்மறை எண்ணங்கள் வந்து செல்லும். அவசர முடிவுகள் வேண்டாம். முன்னேறும் நாள்.

**மகரம்**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

**கும்பம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். எதிர்பார்த்த பணம் வரும்.

# மன்னாரில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த 6 பேர் கைது

மன்னார், நவ. 04

மன்னார் கிழக்கு கடற்கரைப் பகுதியான அரிப்பு பண்டார வெளி கடற்பரப்பில் கடற்படையால் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சட்டவிரோதமான முறையில் இரவு வேளையில் கடலட்டை பிடித்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு டிங்கி படகு மற்றும் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட 227 கடலட்டைகள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மீன்பிடி நடைமுறைகளைத் தடுக்கும் நோக்கில், கடற்படை தீவைச் சுற்றியுள்ள கரையோர மற்றும் கடற்பரப்புகளில் வழக்கமான தேடுதல் நடவடிக்கைகளையும் ரோந்து பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.



இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் சிலாவத்துறை அரிப்பு மற்றும் நானாட்டான் பிரதேசங்களைச் சேர்ந்த 22 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.

சந்தேகநபர்கள் கடலட்டை மற்றும் படகுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்...

# அம்பன் கிழக்கில் ஓர் இலட்சம் பனம் விதைகள் நடும் திட்டம்

வடமராட்சி, நவ. 04

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் மர நடுகை மாதத்தை முன்னிட்டு ஓர் இலட்சம் பனம் விதைகள் நடும் திட்டம் நேற்று முன்தினம் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அம்பன் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க முன்னாள் தலைவர் தங்கராசா கார்த்தீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் பிரேம், பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பனம் விதைகள் நடும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.



இந்த நிகழ்வில் அம்பன் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க முன்னாள் பொருளாளர் கி. விசிகரன் மற்றும் முன்னாள் அம்பன் கிழக்கு கிராம அபிவிருத்துச் சங்க நிர்வாகிகள் கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் கொட்டோடை கிராமத்தில் 10,000 பயன்தரும் மரங்கள் நடுகை செய்யப்படவுள்ளன.


# ஆன்மாக்களை நினைவு கூர்ந்து மன்னாரில் அஞ்சலி நிகழ்வுகள்

மன்னார், நவ. 04

மன்னார் பேசாலை கல்லறை தோட்டத்தில் புனித வெற்றி நாயகி ஆலயத்தின் பங்குத்தந்தை தலைமையில் இரங்கல் திருப்பலி மற்றும் மரித்த விசுவாசிகளின் கல்லறைகள் ஆசீர்வதித்து அர்ச்சிக்கப்பட்டன.

மரித்த விசுவாசிகளின் கல்லறைகளில் உறவினர்கள் நினைவு அஞ்சலி செலுத்தி உருக்கத்துடன் மன்றாடி நினைவு கூர்ந்தனர்.

மேலும், மன்னார் மாவட்ட பகுதிகளில் உள்ள கத்தோலிக்க கல்லறை தோட்டங்களிலும்



இவ்வாறான அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

உலகளாவிய ரீதியில் கத்தோலிக்க திருச்சபையால் முன்னெடுக்கப்படும் மரித்த விசுவாசிகள் நித்திய இளைப்பாற்றிக்காகவும் மோட்ச இராட்சியத்தில் சேர்ந்து கொள்ளவும் செபிக்கும் வகையில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

# நல்லூர் பிரதேச சபை ஊழியர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 04

கோண்டாவில் பகுதியில் நல்லூர் பிரதேச சபை ஊழியர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

நல்லூர் பிரதேச சபையின் மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய 43 வயதுடைய, மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார், சடலத்தை மீட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர குமார அரசாங்கத்தின் கன்னி பட்ஜெட் மார்ச்சில்!

கொழும்பு, நவ. 04

**ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அரசாங்கத்தின் கன்னி வரவு - செலவு திட்டத்தை மார்ச் மாதம் சமர்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

வாஷிங்டன் பேச்சுகளின் பின்னர், மேலதிக உறுதிப்பாடுகளுக்காக பாராளுமன்றத் தேர்தல் முடிவடைந்த பின்னர் உயர் மட்ட குழுவை கொழும்புக்கு அனுப்புவதற்கு சர்வதேச நாணய நிதியம் தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில், மூன்றாவது நீடிக்கப்பட்ட கடன்வசதி அடுத்த வருடத்திலேயே இலங்கைக்கு கிடைக்கப்பெறும்.

சர்வதேச நாணய நிதியத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடந்த வாஷிங்டன் பேச்சுகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால், மூன்றாவது நீடிக்கப்பட்ட கடன் வசதி அடுத்த வருடமே இலங்கைக்கு கிடைக்கப் பெறவுள்ளது.

இதற்கு முன்னர் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை வெளிப்படுத்த வேண்டும். ஆனால், பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கத்தின் தகவல்களின் பிரகாரம் எதிர்வரும் மார்ச்சில் புதிய அரசாங்கத்தின் கன்னி வரவு - செலவு திட்ட அறிக்கை சமர்பிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

# முட்டையின் விலை விரைவில் உயரும்?

கொழும்பு, நவ. 04

எதிர்வரும் நாட்களில் முட்டையின் விலை வேகமாக உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மாத நடுப்பகுதியில் மீண்டும் முட்டை விலையை உயர்த்த கோழிப் பண்ணை உரிமையாளர்கள் திட்டமிட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. தற்போது, ஒரு முட்டை 35 ரூபாய் முதல் 37 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இருப்பினும், கோழிப்பண்ணைகளில் 28 ரூபாய் முதல் 30 ரூபாய் வரையான விலையில் வாங்கப்படும் முட்டை, சில்லறை வியாபாரிகள் மற்றும் இடைத் தரகர்களால் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. ஒரு முட்டையின் உற்பத்திச் செலவு 34 ரூபாயாக உயர்ந்துள்ளது. கோழித் தீவனம் மற்றும் அரிசியின் விலை உயர்வே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

எனவே, வரும் நாட்களில் முட்டையின் விலை அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. (ஐ)

## சின்னமுத்து நோய் தடுப்பு வாரம் இன்றுமுதல் ஆரம்பம்!

கொழும்பு, நவ. 04

சின்னமுத்து அம்மை நோய்க்கான தடுப்பு வாரம் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மீண்டும் சின்னமுத்து அம்மை நோய் பரவாமல் அதனைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து இதன்போது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், விசேட தடுப்பூசி செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# சிறுவர்களின் உணவுபெட்டிகள் 75 வீதமானவை தரமற்றவை!

சுகாதார பரிசோதகர் சங்கம்

கொழும்பு, நவ. 04

நாட்டில் சிறுவர்கள் பயன்படுத்தும் மதிய உணவு பெட்டிகள், தண்ணீர் போத்தல்களில் 75 வீதமானவை தரமற்றவை என்று பொது சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

தரமில்லாத இவ்வாறான பொருட்கள் உள்நாட்டு சந்தையில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்தப் பொருட்கள் சிறுவர்களுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்துகின்றது. இவை, சீனா போன்ற நாடுகளில் இருந்து கட்டுப்பாடில்லாமல் இறக்குமதி செய்யப்படுகின்றது.

இருப்பினும், சந்தைக்குச் செல்லும் வாடிக்கையாளர் இந்தப் பொருட்களை வாங்கும் போது ஏதேனும் புரிதல் உள்ளதா என்று கேட்டோம். பல நுகர்வோர் தயாரிப்பின் விலை மற்றும் அதன் அழகைப் பற்றி மட்டுமே அவதானிப்பதாக தெரிவிக்கின்றனர்.

சுகாதார அதிகாரிகளின் கூற்றுப்படி, உணவு மற்றும் தண்ணீருக்குப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை வாங்கும் போது, அதன் கீழ்ப்பகுதியில் BPA அல்லது கீழே 5 என்ற எண் எழுதப்பட்டுள்ளதா என்பதை கவனிக்க வேண்டும். இல்லையெனில், பொருட்களில் கண்ணாடியுடன் ஒரு முள்கரண்டியின் குறி இருக்கிறதா என்று சரிபார்க்கவும். இந்த இரண்டு அடையாளங்களும் இருந்தால், இது போன்ற சாதனங்கள் உங்கள் குழந்தைக்கும் உங்களுக்கும் பயன்படுத்த ஏற்றது.

சந்தையில் பல்வேறு இலக்கங்களுடன் விற்பனை செய்யப்படும் கவர்ச்சிகரமான மதிய உணவுப் பெட்டிகள், தண்ணீர் போத்தல்தில் சோதனைகள் தொடர்பில் எதிர்காலத்தில் சோதனைகள் தீவிரப்படுத்தப்படும் என்று பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். (ஐ)

# ஒருவர் கொலை; சந்தேகநபர் கைது!

கொழும்பு, நவ. 04

65 வயது நபரை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொன்றார் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு களுத்துறை -பொலொஸ்ஸ கமவை சேர்ந்த 65 வயது நபரே உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் 41 வயது நபர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்பட வில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

# வாக்காளர் அட்டை விநியோகம் வியாழக்கிழமையுடன் நிறைவு!

பிரதி தபால் மா அதிபர்

கொழும்பு, நவ. 04

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணி எதிர்வரும் வியாழக்கிழமை நிறைவடையவுள்ளது என்று பிரதி தபால் மா அதிபர் ராஜித கே. ரணசிங்க தெரிவித்தார்.

அத்துடன், குறித்த காலப்பகுதிக்குள் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் தங்களுக்குரிய தபால் நிலையத்தை நாடுமாறும் அவர் கூறியுள்ளார்.

பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள், இதர ஆவணங்களை விநியோகிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கடந்த மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமானது. பொதுத்தேர்தல் நிறைவடையும் வரை தபால் ஊழியர்களின் சகல விடுமுறைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன - என்றும் கூறினார். (ஐ)

# வழிபாட்டு தலங்களின் பாதுகாப்பு நீக்கப்படாது

பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, நவ. 04

ஆலயங்கள், மத வழிபாட்டுத்தலங்கள் அமைந்துள்ள பகுதிகளில் இருந்து படையினரை விலக்கிக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளியாகும் தகவல்களை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது.

ஆலயங்கள், வழிபாட்டுத் தலங்களின் பாதுகாப்புக்காக ஈடுப டுத்தப்பட்டுள்ள படையினரை விலக்கிக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் தவறானவை என்று அது குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறான தீர்மானங்கள் எவற்றையும் எடுக்கவில்லை. இந்த தகவல்கள் முற்றிலும் தவறானவை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

அஸ்வெசும நலன்புரி திட்டம்:

## பாதிக்கப்பட்டோரை கண்டறிய 10 பேர் கொண்ட குழு நியமனம்

கொழும்பு, நவ. 04

அஸ்வெசும நலன்புரி திட்ட உதவித் தொகை வழங்கும் நடவடிக்கையில் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து முறையான விசாரணைகளை நடத்த 10 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் நலன்களை வழங்குவதில் காணப்படும் அசௌகரியங்கள், நியாயமற்ற செயல்முறை மற்றும் பொது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை கண்டறிவதை நோக்கமாகக் கொண்டு இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

# புதிய வாகன பதிவுகள் தற்காலிகமாக நிறுத்தம்

கொழும்பு, நவ. 04

வாகன இலக்கத் தகடுகளை அச்சிடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையால் புதிய வாகனப் பதிவுகள் மற்றும் வாகன பெயர் பதிவுகளின்போது இலக்கத் தகடுகளை வழங்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. மோட்டார் போக்குவரத்து திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது.

இதன்படி, புதிய வாகன பதிவின் போது வாகன உரிமையாளர்களுக்கு வாகன இலக்கத்தகடு வழங்காமை குறித்து கடிதமொன்று வழங்கப்படுவதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

எனவே மறு அறிவித்தல்வரை வாகன உரிமையாளர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்த வேண்டாம் என பொலிஸ் மா அதிபருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமனித சர்வாதிகாரமே தமிழ் அரசு கட்சியில் உள்ளது

## தவராசா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 04

**தமிழ் அரசுக் கட்சியில் தனிமனித சர்வதிகாரம் மட்டும் இருக்கிறதே ஒழிய ஜனநாயகம் இல்லை என்று சட்டத்தரணி கே. வி. தவராசா தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் பிரசாரத்தில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், தமிழ் அரசுக் கட்சியில் ஜனநாயகம் இல்லை தனி மனித சர்வாதிகாரம் நடக்கின்றது. இவர்கள் தமிழ்த் தேசியத்தை அழித்து விட்டார்கள். தமிழ் அரசுக் கட்சியில் ஊழல் நடக்கிறது.

தமிழர்களின் பிரச்னைகளை நாம் ஒன்றாகக் கலந்துரையாடி தென்னிலங்கை அரசாங்கத்திடம் முன்வைக்க வேண்டும். எனினும், நமது தமிழ் அரசியல் வாதிகள் தென்னிலங்கை அரசுக்கு எது சார்பாக இருக்கின்றதோ அதையே செய்கின்றனர்", என்றார். (ஐ)





# ஐ. த. தே. கூட்டணியினருக்கு வவுனியாவில் பணிமனை!

வவுனியா, நவ. 04

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் தேர்தல் பணிமனை நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா திருநாவற்குளம் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

அந்தக் கட்சியின் வன்னி தேர்தல் மாவட்ட வேட்பாளர்களான க. யசோதினி, க. துளசி ஆகியோரின் பிரசார நடவடிக்கைக்காகவே இந்தப் பணிமனை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முன்னாள் போராளிகள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)



# ஜனநாயக தமிழரசுக்கு நுணாவிலில் பணிமனை!

தென்மராட்சி, நவ. 04

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் ஜனநாயக தமிழரசு கூட்டமைப்பு என்ற பெயரில் போட்டியிடும் சுயேச்சை குழுவின் பணிமனை நேற்று சாவகச்சேரி - நுணாவிலில் திறந்து வைக்கப்பட்டது.

சனநாயக தமிழரசுக் கூட்டமைப்பின் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் ஜனநாயக தமிழரசு கூட்டமைப்பின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா உள்ளிட்ட வேட்பாளர்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர். (ஐ-05)

# தமிழ் அரசுக் கட்சிக்கே வாக்களிக்க வேண்டும்!

## சிறீநேசன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, 04

சில்லறை கட்சிகளுக்கும் சுயேச்சைகளுக்கும் வாக்களிப்பதைத் தவிர்த்து தாய்க் கட்சியான தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் - இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு வேட்பாளர் ஞா. சிறிநேசன் தெரிவித்தார்.

வவுணதீவில் தேர்தல் பணிமனை ஒன்றை திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழர்களின் வாக்குகளை சிதறடித்து மாற்று இன கட்சிகளுக்கு ஆசனத்தை பெற்றுக் கொள்வதற்காகவே சுயேச்சை குழுக்கள் போட்டியிடுகின்றனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ்த் தேசிய கட்சி தான். ஆனால், அந்த கட்சி வாக்குகளை சிதறடிக்க முடியுமே தவிர ஓர் ஆசனத்தை மட்டக்களப்பில் கைப்பற்ற முடியாது.

திசைகாட்டியினர், ஊழல் இல்லாத மோசடி இல்லாத ஒரு நேர்மையான ஆட்சியை கொண்டுவரப் போகிறோம் என்கிறார்கள்- அதனை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால், தமிழர்களின் பிரச்னைகளாக உள்ள, இனப் பிரச்னைக்கு தீர்வு, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி பரிகாரம் என்பவற்றுக்கு அவர்களிடம் என்ன தீர்வு உள்ளது.

படகு கட்சியாக இருக்கட்டும், காரில் போட்டியிடுகின்ற முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் என்று சொல்லப்படுகின்றவர்கள் கடந்த காலத்தில் எமது போராட்டத்தை காட்டி கொடுத்தவர்கள் என்பதை மறந்து விடக் கூடாது.

கிழக்கை பாதுகாக்கிறோம் என்று இவர்கள் கூறுகிறார்கள். மயிலத்தமடு மாதவனை போன்ற இடங்களில் குடியேறிய ஆக்கிரமிப்பாளர்களை அவர்களால் வெளியேற்ற முடியவில்லை. அரசோடு இணைக்க அரசியல் செய்தால் எல்லாவற்றையும் சாதித்து விடலாம் என்று சொன்னார்கள் இரண்டு இராஜாங்க அமைச்சர்கள் இங்கு அரசியல் செய்து எதை சாதித்திருக்கின்றார்கள்? - என்றும் கேள்வி எழுப்பினார். (ஐ)



# தமிழ் அரசு கட்சி வேட்பாளர்களின் ஒழுக்கத்தில் மக்களுக்கு சந்தேகம்!

## மிதிலைச்செல்வி கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ. 04

தமிழ் அரசுக் கட்சியில் பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிடும் சிலரின் தனிப்பட்ட ஒழுக்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் சிறந்த அபிப்பிராயம் இல்லை என்று தமிழ் மக்கள் கூட்டணியின் பெண் வேட்பாளர் மிதிலைச்செல்வி சிறீபத்மநாதன் தெரிவித்தார்.

தமிழ் அரசு கட்சியின் ஊடகப் பேச்சாளர் அண்மையில் நடந்த ஊடக சந்திப்பு ஒன்றில், தமிழ் அரசு கட்சியில் பல வருடங்களாக அங்கத்தவர்களாகவும் பொறுப்பு மிக்க பதவியில் இருந்து வெளியேறியவர்களை கிண்டல் அடிக்கும் வகையில் இரு மாங்கனிகள் எனத் தெரிவித்திருந்தார்.

நான் அவரிடம் கேட்க விரும்புகிறேன் தமிழ் அரசு கட்சியிலிருந்து ஆளுமையான பெண்களை நீக்கிவிட்டு காடுமேடென அலைந்து திரிந்து இரண்டு வெம்பல் மாம்பழங்களை அழைத்து வந்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வைத்துள்ளார்.

பிரசாரத்துக்கு சென்ற என்னிடம், தமிழ் அரசின் வேட்பாளர்கள் சிலரின் பெயர்களை கூறி, சுய ஒழுக்கமற்றவர்களுக்கு எவ்வாறு ஆசனங்கள் வழங்கப்பட்டது என்று கேட்டார்கள்.

நான் அவர்களிடம் கூறினேன் தமிழ் அரசு கட்சியின் நிலைமை அவ்வாறு தான் இருக்கிறது திறமையானவர்கள் - நேர்மையானவர்கள் கட்சியில் இருந்து விலகி விட்டார்கள் - என்றேன்.

# மூடப்பட்டிருந்து பாதையை திறந்ததை வரவேற்கிறோம்

## ஐக்கிய மக்கள் சக்தி

கிளிநொச்சி, நவ. 04

நாட்டின் ஜனாதிபதி ஒரு பச்சை சமிக்ஞை காட்டியிருக்கிறார். 34 வருடங்களாக மூடப்பட்டிருந்த பாதையை திறந்திருக்கின்றார் இதனை நாம் வரவேற்கிறோம் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் உமாசந்திர பிரகாஷ் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 396 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் இருக்கின்றனர். ஜனநாயக வெற்றியாக பார்த்தாலும் ஆறு ஆசனங்கள் தான் கிடைக்கப்போகின்றன. இந்த 396 பேரும் தேர்தலுக்கு பின்பும் மக்களுடன் சேர்ந்து வேலை செய்யவேண்டும். சம நிலையான பாராளுமன்றத்தில் மக்கள் ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்தவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் குறிப்பாக பெண்களை அனுப்ப வேண்டும்.

வடக்கு மாகாணத்தின் மக்களின் எதிர்பார்ப்பு அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்பது எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இதனைக் குறிப்பிட்டுள்ளோம்.

நாட்டின் ஜனாதிபதி ஒரு பச்சை சமிக்ஞை காட்டியிருக்கிறார். 34 வருடங்களாக மூடப்பட்டிருந்த பாதையை திறந்திருக்கின்றார். இதனை நாம் வரவேற்கிறோம். இது தேர்தல் கால வாக்குறுதியாக இல்லாமல் தேர்தலுக்கு பின்னரும் உரிமை சார்ந்து மற்றும் அரசியல் தீர்வு விடயத்தில் தற்போதைய அரசு முன்னெடுப்புக்களை முன்னெடுக்க வேண்டும். இந்த விடயத்தை பலர் தனிப்பட்ட ரீதியில் உரிமை கோருகின்றனர். இதை யாருமே உரிமை கோரி அரசியல் சாயம் பூச வேண்டாம் - என்றார். (ஐ)

# இனவாத அரசியலை மீள உருவாக்க சதி!

திருகோணமலை, நவ. 04

இனவாத அரசியலை இந்த நாட்டில் மீண்டும் உருவாக்குவதற்கு தேர்தலில் தோல்வி அடைந்தவர்கள் முயற்சி செய்து வருகின்றனர் என்று ஹெந்து னெத்தி கூறியுள்ளார்.

திருமலையில் நடந்த பிரசார கூட்டம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், 2019ஆம் ஆண்டு, எங்களுடைய கட்சியை சேர்ந்த சரோஜா போல்ராஜ் சகோதரி வெளியிட்ட ஒரு சிறிய விடயத்தை சில ஊடகங்கள் இன்று தூக்கிப் பிடித்துக் கொண்டு அவற்றை பெரிய பூதாகரமாகக் காட்டி, முஸ்லிம்களை திசை திருப்ப அபார முயற்சி செய்கின்றன.

ஆனாலும், எங்களுடைய ஆட்சியில் அபார நம்பிக்கை வைத்துள்ள தமிழ், முஸ்லிம் மக்களை இன வாதங்களையும் மத வாதங்களையும் கூறி, திசை திருப்ப முடியாது என்பதை எதிர்வரும் பொதுத்தேர்தல் முடிவுகள் நிச்சயம் நிரூபிக்கும். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறுதி பெரும்பான்மையை தேசிய மக்கள் சக்தி பெறும்!

## எஸ். பி. திஸநாயக்க சொல்கிறார்

கொழும்பு, நவ. 04

**பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி இலகுவில் சாதாரண பெரும்பான்மை பலத்தைப் பெறும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் போன்ற தேசிய மட்ட தேர்தல்களால் எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தல் தொடர்பில் பெரிதாகக் கவனம் செலுத்தப்படவில்லை. அப்படி இருந்தும் தேசிய மக்கள் சக்திக்கு 15 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனைப் பின்னடைவு எனக் கூற முடியாது. முதலாம் இடத்தைப் பிடித்த கட்சிக்கும், இரண்டாம் இடத்தைப் பிடித்த கட்சிக்கும் இடையில் வாக்குகளில் நிறைய வித்தியாசம் உள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் என்பது தேசிய மட்டத் தேர்தல். மக்கள் வாக்களிப்பதில் ஆர்வமாக உள்ளனர். எனவே, இந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சாதாரண பெரும்பான்மையை இலகுவில் பெறும். தேசிய மக்கள் சக்தியைவிட அந்தக் கட்சியினருக்குப் பின்னால் உள்ள கம்யூனிஸ்ட் சித்தாந்தம்மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. எனவே, அந்தக் கட்சியினரால் நீண்ட பயணத்தைச் செல்ல முடியும் என நம்புகின்றேன்.

தேசிய மக்கள் சக்தியில் வாக்கு கேட்கும் எண்ணம் எனக்கு இல்லை. கிடைத்துள்ள மாற்றத்தை அவர்கள் சிறப்பாக முன்னெடுத்து செல்ல வேண்டும்" - என்றார். (ஐ)



# அடுத்த 10 ஆண்டுகளில் குடும்பத்துக்கு ஒரு கார்!

## சாத்தியமாக்குவோம் என்கிறது ஜே. வி. பி.!

கொழும்பு, நவ. 04

அடுத்த 10 வருடங்களில் குடும்பம் ஒன்று கார் ஒன்றை உரித்தாகக் கொண்டிருக்கும் வகையில் பொருளாதாரம் உயர்த்தப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரின் ஹேவாகே தெரிவித்துள்ளார்.

மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பாராளுமன்றத் தேர்தல் திட்டமிட்டபடி 14ஆம் திகதி நடைபெறும். 16 அல்லது 17ஆம் ஆகும்போது அமைச்சரவை பதவிப் பிரமாணங்களைச் செய்துகொள்ளும். 21ஆம் திகதி பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு கூட்டப்படும். அதன் பின்னர் சிறந்தவொரு நாட்டை உருவாக்கின்ற செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

வீதிகளில் குடும்பமாக செல்கின்றவர்களை பார்கின்றபோது எமக்கு மிகுந்த கவலையாக உள்ளது. கணவன், மனைவி இரண்டு குழந்தைகள் அனைவரும் மோட்டார் சைக்கிளில் மழையில் நனைந்தவாறு செல்கிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவின் வாகனம் 395 இலட்சம் ரூபாயாக இருக்கிறது. சாதாரண மக்களும் காரின் உரிமையாளராக மாற்றும் நிலைமையை அடுத்த 10 ஆண்டுகளில் நாம் உருவாக்குவோம் - என்றார். (ஐ)

# கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் பஸ்ஸின் கதி இலங்கைக்கும் வரலாம்

## ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, நவ. 04

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக பேருந்து விபத்துக்குள்ளானது போன்ற நிலைமை இலங்கைக்கும் ஏற்படலாம் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அனுபவம்மிக்க தலைமைத்துவம் இல்லாவிட்டால் இலங்கை மீண்டும் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடலாம். தற்போதைய அரசாங்கத்தில் அனுபவம் மிக்கவர்கள் குறைவு. எதிர்கால நெருக்கடிகளை தவிர்ப்பதற்கு அறிவுள்ள தலைமைத்துவம் அவசியம்.

நான் கடந்தகாலங்களிலும் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்துள்ளேன் தற்போது எங்கள் குழுவிலிருந்து புதிய அணியை உருவாக்கவேண்டும் என்றே கருதுகின்றேன். இவர்கள் மாத்திரமே நாட்டில் உள்ள அனுபவசாலிகள்.

எனது அணியினர் மூன்று நான்கு வருடங்கள் பதவி வகித்துள்ளனர் நாட்டின் பொருளாதார மீட்சியின்போது குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்துள்ளனர் புதிய பாராளுமன்றத்தில் அனுபவசாலிகள் இன்மை



பின்னடைவாக அமையலாம்.

அனுபவமற்ற தலைமையால் நாட்டின் உறுதித்தன்மைக்கு பாதிப்பு ஏற்படலாம். இரண்டு மாணவர்கள் உயிரிழப்பதற்கு காரணமாகவிருந்த கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பேருந்து போல இலங்கையும் பாதிக்கப்படலாம் - என்றார். (ஐ)

# மக்களின் அபிலாசைகளை ஜனாதிபதி சிதைத்துள்ளார்

## சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 04

ஜனாதிபதி அநுர குமார தேர்தல் காலத்தில் மக்களின் எதிர்பார்ப்புகளை உச்சத்துக்குக் கொண்டு வந்து, இன்று ஆட்சிக்கு வந்தும் தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது, மக்கள் அபிலாசைகளை சிதைத்துள்ளார் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பு - கெஸ்பேவவில் நடந்த பிரசார கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் மக்களுக்குப் பல வாக்குறுதிகளை வழங்கிய தற்போதைய ஜனாதிபதி மக்களின் எதிர்பார்ப்புகளை உச்ச நிலைக்குக் கொண்டு வந்தார். மின் கட்டணத்தை 66 சதவீதம் குறைக்கலாம், உணவுப்பொருட்களின்



விலையையும் குறைப்போம் என்று ஜனாதிபதி கூறினார்.

ஆனால், ஆட்சிக்கு வந்தும் அவர் கூறியவாறு அதனைக் குறைக்கவில்லை. இவற்றைச் செய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒப்புதல் தேவையில்லை - என்றார். (ஐ)

# மலையக பிரச்னைகள்; அநுரவுடன் பேசுவோம்

## மனோ கணேசன் எம். பி.

ஹற்றன், நவ. 04

மலையகம் சார்ந்த பிரச்னைகள் தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமாரவோடு பேச்சு நடத்துவோம் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கனேசன் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நடந்த நிகழ்வு ஒன்றி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "எங்களை பகைத்துக் கொண்டு மலையகத்துக்கு அநுரவால் நியாயத்தை வழங்க முடியாது. தமிழ் முற்போக்கு கூட்டணி என்பது மலையகத்தின் உயிர்நாடி. தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பாக ஏழு மாவட்டங்களில் பத்து வேட்பாளர்களை களமிறக்கி போட்டியிடுகின்றோம் அதில் போட்டியிடுகின்ற பத்து பேரும் வெற்றி பெறுவோம் - என்றார்.

# தோட்ட தொழிலாளர்களின் உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தை அரசாங்கம் வழங்கும்!

## அநுரகுமார திஸநாயக்க

நுவரெலியா, நவ. 04

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியத்தை வழங்க எமது அரசாங்கத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று நுவரெலியாவில் நடந்த பரப்புரை கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கடந்த காலங்களில் அநேகமான கட்சி தலைவர்கள் நுவரெ லியா மாவட்டத்துக்கு வருகை தந்தனர். நுவரெலியா மாவட்ட மக்களின் வாக்குகளை பெறுவதற்கு எதிர்பார்த்து வந்தனர். இம்முறை வரவில்லை.

ஜனாதிபதித் தேர்தலின் போது அவர்களுக்கு மக்களின் வாக்குகள் தேவைப்பட்டன.

தற்போது அவர்களுக்கான வாக்கு கொழும்பில் உள்ளது. அவர்கள் தற்போது கொழும்பிலிருந்து வெளியில் வருவதில்லை. இந்த அரசியல் வியாபாரம் என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் தோல்வியடைந்த காலப்பகுதியும் உண்டு - வெற்றி பெற்ற காலப்பகுதியும் உண்டு. ஆனால், எந்த நேரத்திலும் நுவரெலியா மாவட்ட மக்களுக்கு நாங்கள் தகவல்களை சொல்ல வந்திருக்கின்றோம்.

எனக்கு ஞாபகம் இருக்கிறது இந்த நுவரெலியா பகுதியில் சிறிய நகரப்பகுதியில் கூட்டங்களை நடத்திய காலங்களும் உண்டு இன்றுதான் தேசிய மக்கள் சக்தி பெரும் கூட்டத்தை நடத்துகிறோம்.

நீண்டகாலமாக இந்த நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்களால் இந்த நாடு பாதாளகுழிக்குள் தள்ளப்பட்டுள்ளது என்பதை அனைவரும் அளித்துள்ளார்கள் நுவரெலியா மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் பெரும் கஷ்டத்தில் விழுந்துள்ள ஒரு மாவட்டம். சுகாதாரம், கல்வி போன்றவை வீழ்ச்சியடைந்துள்ளன - என்றும் அவர் கூறினார். (ஐ)

# பாரம்பரிய கட்சிகளால் முடியாததை முற்போக்கு கூட்டணி சாதித்துள்ளது

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

ஹற்றன், நவ. 04

மலையகத்தில் பாரம்பரியமாக இருந்த அரசியல் கட்சிகள் அடைய முடியாத இலக்குகளை - சாதனைகளை தமிழ் முற்போக்கு கூட்டணி செய்து காட்டியிருக்கிறது - இவ்வாறு கூறியுள்ளார் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்.

ஹற்றனில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், " ஆட்சியாளர்களின் அலட்சிய போக்கு ஒரு புறம் தோட்ட கம்பனிகளின் பிடிவாதம் மறுபுறம் நிர்வாகத்தில் இருக்கின்ற பெருச்சாளிகளின் அரசியல் இன்னொருபுறம் இவற்றுக்கெல்லாம் ஈடுகொடுத்து மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் அரசியல் சாதாரண விசயமல்ல.

மனோ, திகாம்பரம், இராதா இந்த மூவரும் தங்களின் வித்தியாசமான ஆளுமைகளின் ஒரு கலவை. இந்த கலவையின் சாதனை மலையகத்தில் மறக்க முடியாத ஒன்று. ஏழு பேர்ச் காணி மற்றும் உறுதிப்பத்திரத்தை பெற்றுக் கொடுத்தார் கள். இதற்கு முன்பு இவ்வாறு கிடைத்ததில்லை - என்றும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா தளங்களுக்கு அச்சுறுத்தல் பாசிக்குடாவில் பலத்த பாதுகாப்பு!

மட்டக்களப்பு, நவ. 04

**அம்பாறை, அறுகம்குடா சுற்றுலா தளத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலை தொடர்ந்து இலங்கையின் புகழ் பெற்ற சுற்றுலாத் தளங்களில் ஒன்றான மட்டக்களப்பு, பாசிக்குடா கடற்கரையிலும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாசிக்குடா கடற்கரை உலகின் மிகச்சிறந்த சுற்றுலாத் தளங்களில் ஒன்றாக விளங்குகிறது.

பாசிக்குடா கடற்கரைக்கு தினமும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வருகை தருகின்றனர்.

விடுமுறை நாட்கள் மற்றும் போயா தினங்கள் உட்பட பல்வேறு பண்டிகை காலங்களிலும் வரும் வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளால் பாசிக்குடா கடற்கரை நிறைந்து காணப்படும்.

இந்தக் கடலில் நீராடி மகிழ்வதற்கும் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்து ஓய்வு நேரத்தை அச்சமின்றி கழிப்பதற்குமாக பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

பாசிக்குடா கடற்கரை திடலில் 24 மணித்தியாலமும் பொலிஸார், கடற்படையினர் மற்றும் சுற்றுலா பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (எ)

# மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்புரவு பணிகள் ஆரம்பம்



மட்டக்களப்பு, நவ. 04

கொக்கட்டிச்சோலை மாவடி முன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தை துப்புரவு செய்யும் நடவடிக்கையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் ஆரம்பித்துள்ளனர்.

இம்மாதம் 27ஆம் திகதி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளதை முன்னிட்டு மட்டக்களப்பிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை துப்புரவு செய்யும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக முன்னணி தேசிய அமைப் பாளர் த. சுரேஸ் தலைமையில் அந்தக் கட்சியின் ஆதரவாளர் கள், பொதுமக்கள் ஒன்றிணைந்து மாவடி முன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தை துப்புரவு செய்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத் தில் வாகரை கண்டலடி, தரவை, தாண்டியடி, மாவடி முன்மாரி ஆகிய நான்கு மாவீரர் துயிலும் இல்லங்கள் உள்ளன. (எ)

# கந்தபுராண படனத்துடன் கந்தசஷ்டி விரதம் ஆரம்பம்





திருக்கோவில், நவ. 04

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி கோவிலில் கந்தசஷ்டி விரதம் சனிக்கிழமை கந்தபுராண படனத்துடன் ஆரம்பித்தது.

நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஆலயத்துக்கு வருகைதந்து தர்ப்பை அணிந்து முறைப்படி விரதத்தை ஆரம்பித்தனர். (எ)

# கரையொதுங்கி இறக்கும் மீன்கள்; துர்நாற்றம் வீசுகிறது கடற்கரை!



மருதமுனை, நவ. 04

ஒரு வகையான மீன் இனங்கள் கரையொதுங்கி இறப்பதனால் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மருதமுனை கடற்கரை பகுதிகளில் துர்நாற்றம் வீசி வருகின்றது.

அண்மைக் காலமாக கிழக்கு மாகாண கடலில் கரையொதுங்கி வரும் ஊம்பல் மீன்கள் எனப்படும் மீன் இனங்கள் இறந்த நிலையில் அப்பகுதியில் கரையொதுங்குவதனால் இவ்வாறு துர்நாற்றம் வீசுகின்றது.

இதன்காரணமாக அப்பகுதி மீனவர்கள் முதல் பொதுமக்கள் வரை பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். காலநிலை மாற்றம் மற்றும் கடலில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றம் காரணமாக இவ்வாறான மீன்கள் கரை ஒதுங்குவதாக மீனவர்கள் கூறினர். அத்துடன் இம்மீன் இனம் கடந்த பத்து அல்லது பதினைந்து வருடங்களுக்கு பின்னர் கரை ஒதுங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முக்கிய பகுதிகளில் உள்ள கடற்கரை பிரதேசங்களில் இவ்வாறு மீனினங்கள் கரையொதுங்கி வருவதுடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான மீன் இனமே இவ்வாறு கரை ஒதுங்கி இறந்து கிடக்கின்றன.

நாவல், கறுப்பு நிறம் கொண்ட மீன்கள் பல்லாயிரக் கணக்கில் இறந்து கரையொதுங்கியுள்ளதுடன் 25 சென்றிமீற்றர் நீளமுள்ள இவ்வகை மீன் இனமானது அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையில் கலிபோர்னியாவிலிருந்து அலாஸ்கா வரை வாழ்கின்றன.

இவ்வகையான மீன் இனம் தங்களது இனத்தை பெருக்கிக் கொள்வதற்காக காலநிலை மாற்றங்களின் போது கற்பாறைகளினுள் இருந்து வெளிப்படுவதுடன் பெரும்பாலும் இவை இரவு வேளைகளிலேயே கரைக்கு வருவது வழமை என்றும் இந்த மீன்கள் ஒரு வகையான இரைச்சல் சத்தத்தை ஏற்படுத்தக் கூடியது எனவும் அமெரிக்க பகுதிகளில் வாழும் இவ்வகையான மீன் இனம் சுமார் 15 வருடங்களுக்கு பிறகு கிழக்கு கடற்கரை பகுதிகளில் கரை ஒதுங்குகிறது என இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானங்கள் பிரிவு மற்றும் பிரயோக விஞ்ஞான பிரிவு தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ. எம். றியாஸ் அகமட் தெரிவித்துள்ளார்.

இந்த மீன் இனம் பற்றி உறுதியாக எதுவும் தெரியாததால் இதனை உணவுக்கு எடுக்க வேண்டாமென பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# மஹ்மூத் மாணவிகள் மூவர் தேசிய மட்டத்துக்கு தெரிவு



மட்டக்களப்பு, நவ. 04

சிங்கள போட்டி நிகழ்ச்சியில் மஹ்மூத் மாணவிகள் மூவர் முதலாம், இரண்டாம் நிலைகள் பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட இரண்டாம் தேசிய மொழி (சிங்கள) தினப் போட்டி நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு, பிள்ளையாரடி நல்லையா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

இந்தப் போட்டியில்கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி சார்பில் தரம் 06 தொடக்கம் 09 பிரிவு வரையான மாணவிகள் பேச்சு, வாசிப்பு போட்டிகளில் பங்கேற்று முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்று மூன்று மாணவிகள் தேசிய மட்ட போட்டி நிகழ்ச்சிக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

தரம் - 08 மாணவி ஐ. ஐ. சுமையா எழுத்துப் போட்டியில் பங்கேற்று முதலாம் இடைத்தையும், தரம் - 06 மாணவி எம். ஐ. அமீஹா சஹ்தா எழுத்துப் போட்டியில் இரண்டாம் இடத்தையும், தரம் - 09 மாணவி ஜீ. எப். சுக்னா ஹானிம் எழுத்துப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றனர். (எ)

# முஸ்லிம் கட்சி ஆதரவாளர் வேட்பாளர்மீது தாக்குதல்!

ஏறாவூர், நவ. 04

ஏறாவூரில் மக்கள் போராட்ட முன்னணியின் வேட்பாளர் வீட்டுக்கு ஆதரவு கோரி தேர்தல் பிரசாரத்துக்கு சென்ற ஆதரவாளர்களில் ஒருவர், வேட்பாளர் மீது மேற்கொண்ட தாக்குதலையடுத்து, அவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தாக்குதலை மேற்கொண்டவர் தப்பியோடிவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் பன்சாலை வீதியிலுள்ள வீட்டில் குறித்த கட்சியின் வேட்பாளரும் அவரது தாயாரும் வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் சம்பவதினமான நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் முஸ்லிம் கட்சி ஒன்றின் ஆதரவாளர்கள் 6 பேர் சென்று வேட்பாளரின் தாயாரிடம் சிறுபான்மையான நாங்கள் வாழும் இடம் எனவே பெரும்பான்மை இன கட்சியில் போட்டியிடக்கூடாது என்று கூறி, அவதூறாக பேசியதையடுத்து வீட்டினுள் இருந்த வேட்பாளர் வெளியே வந்த போது அவருக்கும் முஸ்லிம் கட்சியின் ஆதரவாளர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த நிலையில் வேட்பாளர் மீது ஆதரவாளர் ஒருவர் தாக்குதலை மேற்கொண்ட நிலையில் அவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதனையடுத்து தாக்குதலை மேற்கொண்டவர் அங்கிருந்து தப்பியோடிவிட்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் நாளை ஜனாதிபதித் தேர்தல்!

## ட்ரம்ப், கமலா இறுதிக்கட்ட பிரசாரம்



வாஷிங்டன், நவ. 04

**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நாளை நடைபெறுகிறது. இந்தத் தேர்தலில் ஆளும் ஜனநாயக கட்சி வேட்பாளர் கமலா ஹாரிஸ், குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் இறுதிக்கட்ட பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.**

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. இதன்படி அந்த நாட்டில் நவம்பர் 5ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது. துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸூம், குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் போட்டியிடுகின்றனர்.

இதேவேளை, அமெரிக்காவின் விஸ்கொன்சின் மாகாணம், மில்வாகி நகரில் நடைபெற்ற இறுதிக்கட்ட பிரசார கூட்டத்தில் கமலா ஹாரிஸ் உரையாற்றும்போது, "எனது தேர்தல் பிரசாரத்தில் மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் குறித்து மட்டுமே பேசி வருகிறேன். குறிப்பாக சுகாதார திட்டங் கள், குறு, சிறு தொழில்களின் வளர்ச்சி, நடுத்தர வர்க்க மக்களின் முன்னேற்றம் குறித்து பல்வேறு வாக்குறுதிகளை அளித்துள்ளேன். ஆனால் டொனால்ட் ட்ரம்ப், பழிவாங்கும் நடவடிக்கைகள் குறித்து பேசிவருகிறார். மனித குலத்துக்கு எதிரான கருத்துகளை கூறி வருகிறார்"என்று தெரிவித்தார். (எ)

# ஈரானில் வளர்ப்பு மகள்களை தந்தை திருமணம் செய்யலாம்

## புதிய சட்டத்துக்கு குவியும் கண்டனங்கள்

தெஹ்ரான், நவ. 04

ஈரானில் வளர்ப்பு மகளை, தந்தையே திருமணம் செய்ய அனுமதி வழங்கும் சட்டம் அந்த நாட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. புதிய சட்டத்துக்கு எதிராக சர்வதேச அளவில் கண்டனங்கள் குவிந்து வருகின்றன.

இளமையான ஈரானை உருவாக்க 15 வயது முதல் 49 வயதுக்கு உட்பட்ட பெண்கள், தொடர்ச்சியாக குழந்தை பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்று ஈரான் சுகாதாரத் துறை துணை அமைச்சர் அலிரேசா ரைசி பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார். ஈரானில் ஓராண்டு காலத்தில் மட்டும் 15 வயதுக்கு குறைவான ஒரு இலட்சத்து 80 ஆயிரம் சிறுமிகளுக்கு திருமணம் நடக்கிறது. அந்த நாட்டில் 10 வயதுக்கு உட்பட்ட நூற்றுக்கணக்கான சிறுமிகளுக்கும் திருமணம் நடைபெற்று வருகிறது.

இந்தச் சூழலில் பெண் குழந்தைகளின் பாதுகாப்பு என்ற பெயரில் ஈரான் அரசு புதிய சட்டத்தை நிறைவேற்றியது. இந்த சட்டத்தின்படி வளர்ப்பு மகளை, தந்தையே திருமணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதாவது தத்தெடுத்து வளர்க்கும் பெண் குழந்தை அல்லது முன்னாள் கணவர் மூலம் மனைவி பெற்ற பெண் குழந்தை 13 வயதை எட்டிய பிறகு தந்தை திருமணம் செய்து கொள்ளலாம். இந்த சர்ச்சைக்குரிய சட்டத்துக்கு எதிராக சர்வதேச அளவில் கண்டனங்கள் குவிந்து வருகின்றன. (எ)



# ஸ்பெயினில் கனமழை 205 பேர் இதுவரை பலி!

## இயல்பு நிலை திரும்பாததால் மக்கள் அவதி

மட்ரிட், நவ. 04

ஸ்பெயினில் கனமழை - வெள் ளப்பெருக்கு காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 200 ஐ தாண்டியது.


வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நான்கு நாட்களாகியும் இயல்பு நிலை திரும்பாததால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

திடீர் வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 205 ஆக அதிகரித்தது. பலரைக் காணவில்லை. மோசமாக பாதிக்கப்பட்டுள்ள வலேன்சியா மாகாணமெங்கும் சேதம் மட்டுமே புலப்படுகின்றன என்று மீட்புக் குழுவினர் கூறினர்.

வீதிகளில் கார்கள் குவியலாகக் கிடக்கின்றன. இந்த கார் குவியல்களில் யாரேனும் சிக்கியிருக்கலாம், இதனால் உயிரிழப்புகள் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. வலேன்சியாவில் மட்டும் 202 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2 மாதங்களில் பெய்ய வேண்டிய மழை வெறும் 8 மணி நேரத்தில் கொட்டித் தீர்த்ததால் பேரழிவை சந்தித்த வலேன்சியா மக்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். மின்சாரம் இல்லை, குடிநீர் இல்லை, உணவு இல்லை, மீட்புக் குழுவினர் சென்றடைவதற்குள் சில பகுதிகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. வலேன்சியாவில் 80 கிலோ மீற்றர் நீளத்துக்கு ரயில் பாதைகள் சேதமடைந்தன. 100 வீதிகள் மோசமாக சேதமடைந்தன. (எ)

# அமெரிக்கா, கனடா, பிரிட்டன் சீக்கியர்களுக்கு இலவச வீசா

## பாகிஸ்தான் அரசு அறிவிப்பு



லாகூர், நவ. 04

அமெரிக்கா, கனடா, பிரிட்டனை சேர்ந்த சீக்கியர்களுக்கு 30 நிமிடங்களில் ஒன்லைனில் இலவசமாக வீசா வழங்கப்படும் என்று பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

சீக்கிய மதத்தை தோற்றுவித்த குருநானக், பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் நங்கானா சாகிபு நகரில் பிறந்தார். அவரது நினைவாக அங்கு குருத்வாரா உள்ளது. இதேபோன்று பாகிஸ்தான் முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட சீக்கிய வழிபாட்டுத் தலங்கள் அமைந்துள்ளன. இந்தியா மட்டுமன்றி உலகம் முழுவதும் வாழும் சீக்கியர்கள் பாகிஸ்தானில் உள்ள சீக்கிய வழிபாட்டுத் தலங்களுக்கு ஆன்மீக சுற்றுலா செல்கின்றனர்.

இந்தச் சூழலில் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் மோசின் நக்வி கூறுகையில், "முஸ்லிம்களின் புனித பூமியாக சவுதி அரேபியா விளங்குகிறது. இதே போன்று சீக்கியர்களின் புனித பூமியாக பாகிஸ்தான் உள்ளது. ஆண்டுதோறும் பாகிஸ்தானுக்கு சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட சீக்கிய பக்தர்கள் வருகை தருகின்றனர். இந்த எண்ணிக்கையை 10 இலட்சமாக உயர்த்த விரும்புகிறோம்.

பாகிஸ்தானுக்கு வரும் சீக்கியர்கள் வீசா பெறுவதில் சில சிரமங்களை சந்திப்பதாக புகார்கள் எழுந்துள்ளன. இந்த பிரச்னைக்கு தீர்வு காண ஒன்லைன் இலவச வீசா திட்டத்தை நடைமுறைப்படுத்தி உள்ளோம்"- என்றார். (எ)

# சீனர்கள் மீதான தாக்குதலை பாக்.கட்டுப்படுத்த வேண்டும்

## சீன தூதுவர் வலியுறுத்தல்

இஸ்லாமாபாத், நவ. 04

பாகிஸ்தானின் கராச்சியில் சீன நாட்டினர் மீது தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 2 சீனர்கள் உயிரிழந்தனர். 10இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

முன்னதாக, கடந்த மார்ச் மாதத்தில் பாகிஸ்தானில் சீன நாட்டினர் மீது தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டது. பாகிஸ்தானில் 60 பில்லியன் டொலர் மதிப்பில் சீனா - பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக சீன நாட்டினர் பாகிஸ்தானில் தங்கி வேலை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தத் தாக்குதல்கள் குறித்து, பாகிஸ்தானில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பாகிஸ்தானுக்கான சீன தூதுவர் ஜியாங் ஜெய்டாங் கூறுகையில், "கடந்த 6 மாதத்தில் மட்டும் பாகிஸ்தானில் சீன நாட்டினர் மீது இரண்டு முறை தாக்குதல் நடத்தப்பட்டன. இது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். சீனாவுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளை பாகிஸ்தான் அரசு முற்றிலும் க்ட்டுப்படுத்த வேண்டும்"- என்றார். (எ)

# இராணுவத் தளத்தை கைப்பற்றிய கும்பல்

லாபாஸ், நவ. 04

தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் ஆயுத கும்பலுக்கும், இராணுவத்துக்கும் இடையே கடந்த சில மாதங்களாக மோதல்கள் நீடித்து வருகிறது. இந்த நிலையில் கோச்சம்பா நகர் அருகே உள்ள இராணுவத் தளத்தை இலக்கு வைத்து ஆயுத கும்பல் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலின் போது, 20இற்கும் மேற்பட்ட படையினரை கடத்திச்சென்றனர்.

அப்போது, இராணுவத் தளத்தில் இருந்து வெடி மருந்து மற்றும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. இதனால் கோச்சம்பா இராணுவத் தளத்தை தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாக ஆயுத கும்பல் அறிவித்துள்ளது. (எ)



# லெபனான்மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்!

## 52 பேர் உயிரிழப்பு

பெய்ரூட், நவ. 04

வடக்கு லெபனானின் விவசாய கிராமங்களில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 52 பேர் உயிரிழந்தனர் என்று லெபனான் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை தொடர்ந்து வருகிறது. தொடர்ச்சியாக இந்த கிராமங்கள் குண்டுவீச்சுக்குள்ளாகின.

பல்வேறு கட்டடங்களின் மீதும் இஸ்ரேலிய போர் விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தின.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 3ஆவது டெஸ்ட் போட்டியிலும் நியூசிலாந்து அபார வெற்றி!

## சொந்த மண்ணில் தொடர் தோல்வி இந்திய அணிக்கு பெரும் நெருக்கடி

மும்பை, நவ. 04

3ஆவது டெஸ்ட் போட்டியிலும் நியூசிலாந்து அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் சொந்த மண்ணில் 3 - 0 என்ற கணக்கில் இந்தியா டெஸ்ட் தொடரை பறிகொடுத்தது.

இந்தியா - நியூசிலாந்து அணிகள் இடையிலான கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணியின் தலைவர் ரொம் லேதம் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

இதன்படி, நியூசிலாந்து முதல் இன்னிங்ஸில் 235 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்களையும் இழந்தது. இந்தியா தரப்பில் ரவீந்திர ஜடேஜா 5 விக்கெட்கள், வாஷிங்டன் சுந்தர் 4 விக்கெட்கள் வீழ்த்தினர்.

பின்னர் முதல் இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா 59. 4 ஓவர்களில் 263 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அனைத்து விக்கெட்களையும் இழந்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக சுப்மன் கில் 90 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து சார்பில் அஜாஸ் பட்டேல் 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 28 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய நியூசிலாந்து 174 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக வில் யங் 51 ஓட்டங்கள் எடுத்தார். இந்தியா தரப்பில் அபாரமாக பந்துவீசிய ரவீந்திர ஜடேஜா 5 விக்கெட்கள் வீழ்த்தினார். இதன் மூலம் இந்திய அணிக்கு 147 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

147 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணிக்கு, நியூசிலாந்து சுழற்பந்து வீச்சாளரான அஜாஸ் பட்டேல் கடும் நெருக்கடி கொடுத்தார். இந்தத் தொடரில் தொடர்ந்து சொதப்பி வந்த முன்னணி வீரர்களான ரோஹித் சர்மா (11) மற்றும்





விராட் கோலி (1) இந்த முறையும் ஏமாற்றினர். மேலும் இளம் வீரர்களான ஜெய்ஸ்வால் 5 ஓட்டங்களிலும், கில் மற்றும் சர்பராஸ் கான் தலா ஓர் ஓட்டத்திலும் ஆட்டமிழந்தனர்.

ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் மறுமுனையில் ரிஷப் பண்ட் அதிரடியாக விளையாடி இந்திய அணியின் வெற்றிக்காக தனி ஆளாக போராடினார். இருப்பினும் மறுமுனையில் அவருக்கு ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. பண்ட் 64 ஓட்டங்களில் ஆட்டமிழக்க அத்தோடு இந்திய அணியின் நம்பிக்கையும் தகர்ந்தது.

முடிவில் இந்தியா 2ஆவது இன்னிங்ஸில் 121 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற நியூசிலாந்து 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக கைப்பற்றி இந்தியாவை சொந்த மண்ணில் வெள்ளையடிப்பு செய்தது. நியூசிலாந்து சார்பில் அதிகபட்சமாக அஜாஸ் பட்டேல் 6 விக்கெட்களை வீழ்த்தினார்.

தொடர் தோல்வியால் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பினை இந்தியா இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. (எ)



# சிறந்த கிரிக்கெட்டை விளையாடவில்லை

## தோல்விக்கு காரணம் கூறிய ரோஹித்

மும்பை, நவ. 04

"நாங்கள் எங்கள் சிறந்த கிரிக்கெட்டை விளையாடவில்லை, இதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்"- என்று

நியூசிலாந்திடம் அடைந்த தொடர் தோல்வி குறித்து இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா விளக்கமளித்துள்ளார்.

"ஒரு தொடரை இழப்பது, டெஸ்டில் தோல்வியடைவது எளிதல்ல, அது எளிதில் ஜீரணிக்க முடியாத ஒன்று. நாங்கள் எங்கள் சிறந்த கிரிக்கெட்டை விளையாடவில்லை, இதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். நியூசிலாந்து வீரர்கள் தொடர் முழுவதும் எங்களை விட மிகவும் சிறப்பாக செயல்பட்டனர். நாங்கள் நிறைய தவறுகளை செய்துள்ளோம், அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். முதல் இன்னிங்ஸில் நாங்கள் போதுமான ஓட்டங்களை எடுக்கவில்லை. நாங்கள் கூட்டாக சிறப்பாக செயல்படாததே இந்தத் தோல்விகளுக்கு காரணம்"- என்றார். (எ)

## முதலிடத்தை இழந்தது இந்தியா முன்னேறியது அவுஸ்திரேலியா

டுபாய், நவ. 04

நியூசிலாந்திடம் அடைந்த தொடர் தோல்வியால் டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் முதல் இடத்தை இழந்தது இந்தியா.

3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 0 - 3 என்ற கணக்கில் இந்திய அணி இழந்தது.

3ஆவது போட்டியில் இந்தியா ஆறுதல் வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இந்தியா தோல்வி கண்டு தொடரை முழுமையாக இழந்தது. இந்த நிலையில், இந்தியா - நியூசிலாந்து டெஸ்ட் தொடர் நிறைவடைந்ததை அடுத்து சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி) டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலை வெளியிட்டுள்ளது.

முதல் இடத்தில் இருந்த இந்தியா (58. 33 சதவீதம்) தற்போது 2ஆவது இடத்துக்கு சரிந்துள்ளது. 2ஆவது இடத்தில் இருந்த அவுஸ்திரேலியா (62.50 சதவீதம்) முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளது. இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்ற நியூசிலாந்து (54.55 சதவீதம்) 5ஆவது இடத்தில் இருந்து 4ஆவது இடத்துக்கு வந்துள்ளது.

இந்தப்பட்டியலில் 3ஆவது இடத்தில் இலங்கை (55.56 சதவீதம்) அணியும், 5ஆவது இடத்தில் தென்னாபிரிக்கா (54.17 சதவீதம்) அணியும் உள்ளன. இதைத் தொடர்ந்து 6 முதல் 9 இடங்களில் முறையே இங்கிலாந்து (40.79 சதவீதம்), பாகிஸ்தான் (33.33 சதவீதம்), பங்களாதேஷ் (27.50 சதவீதம்), மேற்கு இந்திய தீவுகள் (18.52 சதவீதம்) அணிகளும் உள்ளன. (எ)

# லிவிங்ஸ்டன் அதிரடி சதம்; இங்கிலாந்து அணி வெற்றி

ஆண்டிகுவா, நவ. 04

இங்கிலாந்து - மேற்கு இந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 5 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் கடந்த 31ஆம் திகதி நடைபெற்ற முதல் போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணி வெற்றி பெற்று தொடரில் 1 - 0 என முன்னிலை பெற்றது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி ஆண்டிகுவாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்கான நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. இதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 328 ஓட்டங்கள் குவித்தது.

மேற்கு இந்திய தீவுகள் அணி தரப்பில் அதிகபட்சமாக ஷாய் ஹோப் 117 ஓட்டங்கள் எடுத்தார். இங்கிலாந்து தரப்பில் ஜோன் டர்னர், ஆதில் ரஷித் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். தொடர்ந்து 329 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய



இங்கிலாந்து 47. 3 ஓவரில் 5 விக்கெட்களை மட்டும் இழந்து 329 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்து தரப்பில் அதிரடியாக ஆடிய லியாம் லிவிங்ஸ்டன் சதம் (124 ஓட்டங்கள்) அடித்து அசத்தினார். மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் மத்தியூ போர்ட் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இங்கிலாந்தின் இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடர் 1 - 1 என சமனில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது போட்டி 6ஆம் திகதி நடைபெறுகிறது. (எ)

# சர்ச்சையை ஏற்படுத்திய ரிஷப்பின் ஆட்டமிழப்பு

மும்பை, நவ. 04

கடைசி போட்டியில் நியூசிலாந்து நிர்ணயித்த 147 ஓட்டங்கள் இலக்கை நோக்கி விளையாடிய இந்திய அணிக்கு ரிஷப் பண்ட் தனி ஆளாக நம்பிக்கை கொடுத்து வெற்றிக்கு போராடினார். அவர் 57 பந்துகளில் 64 ஓட்டங்கள் அடித்திருந்தபோது அஜாஸ் பட்டேல் பந்துவீச்சில் எல். பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். முதலில் நடுவர் ஆட்டமிழப்பு வழங்கவில்லை. பின்னர் நியூசிலாந்து முறையீடு செய்தது.

முன்னாள் வீரரான டி வில்லியர்ஸ், "சர்ச்சை! மீண்டும் ஒரு தவறான ... ரிஷப் பண்ட் துடுப்புமட்டை ... பந்து அவரது துடுப்புமட்டையை தாண்டும்போது ஸ்னிக்கோ மீற்றரில் ஒரு அதிர்வு காணப்பட்டது. ஆனால், அந்த பந்து உறுதியாக துடுப்புமட்டையில் பட்டதா? என்று நமக்கு தெரியவில்லை. இது ஒரு பெரிய டெஸ்ட் போட்டியில் பெரிய தருணத்தில் நடக்கிறது. இப்படியான நேரத்தில் அதிநவீன தொழில்நுட்பம் எங்கே?" என்று கேட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சனநாயக...

சனநாயக தமிழரசு கூட்டமைப்பின் தலைவர் கே. வி. தவராசா தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் அந்த சுயேச்சை குழுவின் வேட்பாளர்கள், அவர்களின் ஆதரவாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

## அநுரவுடன்

எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியு டன் சஜித் பிரேமதாஸ உரையாடி தக வல்களை கேட்டறிந்தார் என்று கூறப் படுகின்றது.

ஜனாதிபதி அநுரவிடம், அறுகம் குடா தாக்குதல் திட்டம் தொடர்பில் "எச்சரிக்கைக்கான காரணங்கள் என்ன?", "இந்த நேரத்தில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?", இவ்வாறான விடயங்கள் மற்றும் தூதரகங்களு டனான தற்போதைய உறவுகள் மற்றும் சுற்றுலாத்துறையில் எதிர்காலத்தில் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் உரையாடியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## விபத்துகளில்...

தெரிவித்துள்ளார்.

அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் கூறினார்.

மேலும், வீதி விபத்துகளில் உயிரிழந்தவர்களில் 676 பேர் பாதசாரிகளாவர். 1,818 விபத்துகளில் 730 மோட்டார் சைக்கிள்களும் 209 ஓட்டோக்களும், 258 லொறிகளும் 146 பேருந்துகளும் 118 வான்களும் சம்பந்தப்பட்டுள்ளன.

மேலும், 42 வாகனங்களின் சாரதிகள் விபத்துகளை ஏற்படுத்தி தப்பிச் சென்றுள்ளனர். எனவே, வீதிகளில் பயணிக்கும்போது பொதுமக்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்றும் பொலிஸ் பேச்சாளர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

## இரண்டு...

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தேர்தல் பணிமனை நேற்று கல்வியங்காட்டில் திறந்து வைக்கப் பட்டது. இதில், பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு சாடினார்.

மேலும், இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்குள் நுழைந்துள்ள சிலர் எதிர் வரும் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்க ஆசனங்கள் பற்றாக் குறையாக இருந்தால் அவர்களுக்கு ஆதரவளிக்க தாம் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளனர்.

தமிழர்கள் விடுதலையை - வீரசுதந்திரத்தை நாடியே நிற்கின்றனர். இதில், உறுதியாக நின்றபடியால்தான் பல்வேறு சோதனைகளை தாங்கி வந்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி தமிழ் மக்களின் வாக்குகளை பெற்று வந்த தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்த சில நபர்கள் எதிர்வரும் அரசாங்கம் தேசிய மக்கள் சக்தியாக வரும் என எதிர்பார்ப் போடு ஆட்சியமைக்கும்போது ஆசனப் பற்றாக்குறை ஏற்படுமிடத்து தாங்கள் கைகொடுக்க தயார் என்று தெரிவித்து, அதற்கு தமிழ் மக்களை தயார்படுத்தும் நடவடிக்கையிலும் இறங்கியிருக்கின்றனர்.

சுமந்திரனுக்கு அமைச்சு பதவி அவசரமாக - அவசியமாக தேவைப் படுகிறது. வெளிவிவகார அமைச்சு பதவி இல்லையேல், நிதியமைச்சு பதவியில் கண் வைத்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டை நேரடியாக சுமத்துகிறேன். தமிழ் மக்கள் தமது சுயநல அடிப்படையில் சிங்கள அரசுகளுடன் சேர்ந்து செயல்பட்ட எந்த தமிழர்களையும் தமிழின உரிமைக் குரலோடு சம்பந்தப்படுத்தி பார்த்தது கிடையாது. தமிழர்களுக்கு நடைமுறையில் தீரவு வராதவரை இப்படியான செயல் பாட்டை தமிழர்கள் ஜீரணிக்க மாட்டார்கள் - என்றும் கூறினார். (ஐ)

# 2024 இலங்கையின் திருப்புமுனையாகும்!

பிரதமர் ஹரிணி அமரசூரிய



கொழும்பு, நவ. 04

2024ஆம் ஆண்டு இலங்கையின் திருப்புமுனையாக மாறும் என பிரதமர், கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மத்துகமவில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கொள்கையுடைய சட்டத்தை மதிக்கின்றவர்களே தங்கள் கட்சியின் வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர். அவர்கள் மக்களின் வளங்களை, பணத்தை திருடுவதில்லை. பொது வளங்களை வீண்விரயம் செய்வதில்லை.

பொதுமக்கள் சேவைக்கு தம்மை அர்ப்பணிக்க முடியுமானவர்களே வேட்பாளர்களாக உள்ளனர். தங்களிடம் சிறந்த திட்டம் காணப்படுவதாகவும் அதனூடாக நாட்டு மக்களின் வாழ்க் கையை அழகாக மாற்றுவதற்கு தாங்கள் செயல்படுகின்றனர் எனவும் பிரதமர் இதன்போது கூறினார். (ஐ)

## தமிழ்...

அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாங்கள் தமிழ் தேசியத்தை விலை பேசி விற்றவர்கள் அல்ல விற்கப் போபவர்களும் அல்ல அது மக்களுக்கு நாங்க தெரியும். ஆகவே, தமிழ் மக்கள் மாவீரர் நாளில் தமது வரலாற்று கடமைகளில் ஒன்றாக தமிழ்த் தேசியம் சார்ந்த வர்களை பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் - என்றார். (ஐ)

## வன்முறையற்ற...

தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணையும் ஒரு கலாசாரம் உருவாக்கப் பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக் கின்றோம்.

இதற்கு உதாரணமாக கடந்த ஜனாதிபதித் தேர்தலை குறிப்பிடலாம். அதே போல இந்த பொதுத்தேர்தலிலும் இது வரை பெரியளவிலான வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் எவையும் பதியப்படவில்லை.

சட்டவிரோத தேர்தல் பிரசாரம் தொடர்பான முறைப்பாடுகளே அதிகளவில் கிடைப்பதை அவதானிக்க முடிகின்றது. இதேவேளை பிரசார நடவடிக்கைகளுக்கு சமூக ஊடகங்கள் பெரும் பங்கை வழங்குகின்றன. இவற்றை நாம் கண்காணிக்கும் போது வேட்பாளர்களுக்கு எதிரான சேறுபூசக்கூடிய இழிவுபடுத்தக் கூடிய போலிப்பிரசாரங்கள், நாளுக்கு நாள் அதிகரிப்பதை அவதானிக்க முடிகின்றது.

எனவே அனைத்து அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியவர்களை வரவழைத்து அமைதியான தேர்தலுக்காக ஒத்துழைப்போம் என்ற வகையில் சத்தியபிரமாணம் ஒன்றை பெறுகின்றோம்.

எனவே, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெற வேண்டும் என்றால் நிச்சயமாக அது வன்முறையற்ற தேர்தலாக இருக்கவேண்டும். வன்முறையற்ற தேர்தலுக்காக அனைத்து அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் ஒன்றிணையவேண்டும் என்றார். (ஐ)

# மதுபோதையில் தாய், சகோதரியை கூரிய ஆயுதத்தால் தாக்கியவர் கைது!

கொழும்பு, நவ. 04

மது போதையில் தனது தாயையும், சகோதரியையும் கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப்படுத்தியவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காயமடைந்த சகோதரி பொல நறுவை பிரதேசத்தில் வசித்து வந்துள்ள நிலையில் மொனராகலையிலுள்ள வெல்லவாயவிலுள்ள தாயாரின் வீட்டுக்கு சென்றுள்ளார்.

இதன்போது, சந்தேக நபர் மது போதையில் வீட்டுக்கு வந்து தனது சகோதரியுடன் முரண்பட்டுள்ளார்.

வாக்குவாதம் எல்லை மீறிய நிலையில் சந்தேக நபர், வீட்டிலிருந்த கூரிய ஆயுதம் ஒன்றை பயன்படுத்தி தனது சகோதரியை பலமாக தாக்கியுள்ளார்.

இதனை அவதானித்த தாய், சந்தேக நபரான தனது மகனைத் தடுக்க முயன்ற போது, அவர் தனது தாயாரையும் கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப்படுத்தியுள்ளார்.

பின்னர், காயமடைந்தவர்கள் வெல்லவாய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். தாயார் மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# அமைச்சர் இல்லாததால் ரூ. 30 இலட்சம் சேமிப்பு!

கொழும்பு, நவ. 04

நீர் வழங்கல் துறை அமைச்சு தற்போது மாதாந்தம் 30 இலட்சம் ரூபாயை சேமித்து வருவதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

நீர் வழங்கல் துறை அமைச்சரின் பணிமனை செலவுகள் தற்போது இன்மையாலேயே மாதம் 30 இலட்சம் ரூபாயை சேமிக்க முடிகிறது என்று அந்தத் துறையின் மூத்த அதிகாரி ஒருவர் கூறினார்.

மேலும், முன்னாள் அமைச்சரின் ஆட்சி காலத்தில் அமைச்சர் மற்றும் அவரின் பணியாளர்களுக்கான எரிபொருள், உணவு போன்றவற்றுக்காக செலவிடப்பட்ட தொகையே தற்போது சேமிக்கப்படுகின்றது என்று கூறிய அவர், முன்னாள் அமைச்சரின் தனிப்பட்ட பணியாளர்களாக 20 பேர் பணியாற்றினர் என்றும் கூறினார்.

முன்னர், நீர் வழங்கல் அமைச்சராக ஜீவன் தொண்டமான் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நகரங்களில் 23 வீதத்தினர் நீரிழிவு நோயால் பாதிப்பு!

கொழும்பு, நவ. 04

நாட்டின் நகர்ப்புற மக்களில் 23 வீதமானோர் நீரிழிவு நோயால் பாதிக் கப்பட்டுள்ளனர் என்று சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் 30 வீதமான மக்கள் ஆரம்பகட்ட நீரிழிவு நோய் அறிகுறிகளை கொண்டுள்ளனர் என்று சமூக மருத்துவ நிபுணர் ஷாந்தி குணவர்தன கூறினார்.

நாட்டு மக்களில் 14 வீதத்துக்கும் அதிகமானோர் நீரிழிவு நோயால் பாதிக் கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

# பதுளை பேருந்து விபத்தில் காயமடைந்தவர் தப்பியோட்டம்!

கொழும்பு, நவ. 04

பதுளை பேருந்து விபத்தில் சிக்கி காயமடைந்து பதுளை போதனா மருத் துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பல்கலைக்கழக மாணவன் ஒருவன் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கம்பஹா - ஜா - எலவை வசிக்கும் 24 வயதுடைய பல்கலைக்கழக மாணவனே தப்பிச் சென்றுள்ளார்.

இந்த மாணவன் கடந்த முதலாம் திகதி பதுளை, துன்ஹிந்த - அம்பகஹ ஓய 5ஆவது மைல்கல்லில் இடம்பெற்ற பஸ் விபத்திலேயே சிக்கி காயமடைந்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் பதுளை பொலிஸார் ஈடு பட்டு வருகின்றனர். (ஐ)

## அரசாங்க...

இதனை ஜனாதிபதி கூறினார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன பிரச்னைக்கும் உரிய தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும். மே தினத் தில் கூறியபடி, பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபாயி நாளாந்த வேதனம் பெற்றுக் கொடுக் கப்படவில்லை.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை பெற்றுக் கொடுப்பதற்கு நாம் நிச்சயம் நடவடிக்கை எடுப்போம். இதேபோல அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்படும்.

மக்கள் எந்நாளும் அரசாங்க நிவாரணங்களை நம்பி வாழமுடியாது. மக்கள் சுயமாக எழுந்து நிற்கக்கூடிய வகையில் பொருளாதார சூழ்நிலையை நாம் உருவாக்குவோம் - என்றும் கூறினார். (ஐ)

# 240,109 இலங்கையர்கள் வெளிநாடு சென்றனர்!

கொழும்பு, நவ. 04

இந்த வருடத்தின் முதல் 9 மாதங்களில் 2 இலட்சத்து 40 ஆயிரத்து 109 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் இதனைத் தெரிவித் துள்ளது.

அவர்களில் 99 ஆயிரத்து 939 பேர் வீட்டுப் பணிப்பெண்கள் எனவும் 70 ஆயிரத்து 396 பயிற்றப்பட்ட பணியாளர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வழங்கும் கடவுச்சீட்டுகளை அதிகரிப்பதற்கு தீர்மானம்!

## குடிவரவு - குடியகல்வு திணைக்களம்

கொழும்பு, நவ. 04

**வழங்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கையை அடுத்த மாத தொடக்கத்தில் இருந்து அதிகரிக்கவுள்ளதாக குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.**

கடவுச்சீட்டுகளை கொள்வனவு செய்வதற்கான வெளிநாட்டு நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் 50 ஆயிரம் 'பி' தொடர் வெற்று கடவுச்சீட்டுகளை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் பெற்றுள்ளது.

மேலும் 7 இலட்சத்து 50 ஆயிரம் வெற்று கடவுச்சீட்டுகளை உரிய காலத்தில் திணைக்களம் பெறும். இதன்படி, ஏறக்குறைய ஒரு இலட்சம் கடவுச்சீட்டுகள் இம்மாத இறுதியிலும், ஒரு இலட்சத்து 50 ஆயிரம் கடவுச்சீட்டுகள் அடுத்த மாதத்திலும் பெற்றுக் கொள்ளப்படும் - என்று குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெற்று கடவுச்சீட்டுகளின் மற்றோர் இருப்புக்கான கொள்முதல் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தற்போது நாளாந்தம் சுமார் ஆயிரத்து 600 கடவுச்சீட்டுகளை வழங்குகின்றது.

வழங்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கையை அடுத்த மாத தொடக்கத்தில் இருந்து அதிகரிக்க திணைக்களம் தீர்மானித்துள்ளது.

விண்ணப்பதாரர்கள் ஆவணங்களை ஒப்படைப்பதற்கான திகதி மற்றும் நேரத்தை முன்பதிவு செய்வதற்கான ஒன்லைன் முறையை சரியான நேரத்தில் உருவாக்க குடிவரவு - குடியகல்வு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# தென்னிலங்கை இளைஞர்கள் சந்திரசேகரனுடனும் சந்திப்பு!

யாழ்ப்பாணம், நவ. 04

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக தென்னிலங்கையிலிருந்து வந்த இளைஞர்கள் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளரையும் சந்தித்து பேசினர்.

இது தொடர்பில் சந்திரசேகரன் கூறுகையில்,

"மாகாண சபைகள் தொடர்பிலான முன்மொழிவுகளை எடுத்து வந்த தென்னிலங்கை இளைஞர்கள் எம்மை வந்து சந்தித்தார்கள். அவர்களுடன் நாங்கள் கருத்துப் பகிர்வில் ஈடுபட்டவேளை இந்த மாகாண சபை முறைமை தொடர்பாகவும், அதன் மூலம் தீர்வுகள் எட்டப்படுமா? எட்டப்படாதா? - அது குறித்து எவ்வாறான நிலைப்பாட்டை தேசிய மக்கள் சக்தி கொண்டுள்ளது என்பது குறித்தும் அவர்களுடன் விரிவாக பேசப்பட்டுள்ளது.

"எது எவ்வாறாயினும், இந்த இளைஞர்களால் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கை என்பது கீழ் மட்ட மக்கள் மத்தியில் சென்று, அவர்களுடன் உரையாடுதல், அந்த உரையாடல்கள் மூலம் அவர்களுடைய பிரச்னை களை இனங்கண்டு, அந்தப் பிரச்னைகளை அரசியல்வாதிகளிடம் ஒப்படைத்தல் என்பன வரவேற்கத்தக்க விடயம்.

இதனடிப்படையில் எதிர்காலத்தில், சாதாரண மக்களுடைய பிரச்னைகள் பற்றி தெரியாத - விளங்காத அரசியல்வாதிகளுக்கு இது ஒரு புலப்பாடாக அமையும் என நாங்கள் நம்புகிறோம் - என்றார்.

(ஐ)

# ஐ. நா. வதிவிடப் பிரதிநிதி உட்பட 15 தூதர்கள் மீளழைக்கப்பட்டனர்!

கொழும்பு, நவ. 04

அரசியல் காரணங்களின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட 15 தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை உடனடியாக இலங்கைக்கு வருமாறு வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திருமதி அருணி விஜயவர்த்தனவால் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டதாக அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதன்படி, ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், பிரித்தானிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம, இந்தியாவின் உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர் ஷெனுகா செனவிரத்ன, அவுஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகர் சித்ராங்கனி வாகீஸ்வர, ஜப்பானுக்கான தூதுவராக ரோட்னி பெரேரா, மலேசியாவின் உயர்ஸ்தானிகர் முன்னாள் விமானப்படைத் தளபதி சுமங்கல டயஸ், நேபாளத்தின் தூதுவர் முன்னாள் விமானப்படை தளபதி சுதர்சன் பத்திரண, கியூபாவுக்கான தூதுவர் முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்ன, பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரான முன்னாள் கடற்படைத் தளபதி ரவீந்திர விஜேகுணரத்ன, ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் உதய இந்திரரத்ன, கென்யா உயர்ஸ்தானிகரான கனகநாதன், சீசெல்ஸ் உயர்ஸ்தானிகரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவியின் சகோதரரான ஷிமால் விக்ரமசிங்க மற்றும் ஈரான் தூதுவராக நியமிக்கப்பட்ட மொஹமட் ஷாஹிட் ஆகியோரை உடனடியாக இலங்கைக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வெற்றிமாகவுள்ள தூதுவர் பதவிகளுக்கு வெளிநாட்டு சேவையாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# தேர்தல் குறித்து 1,408 முறைப்பாடுகள்!

கொழும்பு, நவ. 04

இம்மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பில் இதுவரை (செப்ரெம்பர் 26 ஆம் திகதி முதல் நவம்பர் 02 ஆம் திகதி வரை) ஆயிரத்து 408 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 364 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 995 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 14 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 35 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. (ஐ)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] இல் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேட் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேட் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.